பக்கங்கள் 22+3

# மாலை முரசு

## எதிர்க்கட்சிகளுடன் கைகோர்க்காதாம் தேசிய மக்கள் சக்தி

### ரில்வின் சில்வா கூறுகின்றார்



எதிர்க்கட்சிகளுடன் தேசிய மக்கள் சக்தி கைகோர்த்து சபைகளை 02

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2057 | சித்திரை 24 புதன்கிழமை 07.05.2025 | அதிர்வு 277

‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்

# கூட்டமைப்பில் இருந்தோர் மீள சேர்ந்தியங்க வேண்டிய நேரம்!

## வந்து விட்டது என்கின்றார் சுமந்திரன்




(பிரபாகரன் டிலக்சன்)

“தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தவர்கள் சேர்ந்து இயங்க வேண்டிய நேரம் வந்துள்ளது. கூட்டமைப்பில் இருந்தவர்கள் எங்களுக்கு (இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு) ஆதரவளிக்கும்போது பெரும்பாலான இடங்களில்நிர்வாகத்தை அமைக்கக் கூடியதாக இருக்கும்.”

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

யாழ். ஊடக அமையத்தில் இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

”நாடளாவிய ரீதியில் உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் முடிவுகள் வெளிவந்திருக்கின்றன. தமிழ் மக்கள் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கு வழங்கிய வெற்றியை மிகவும் தாழ்மையுடன் ஏற்றுக்கொள்கின்றோம். 02

# ஓரணியில் திரள்வோம்

## எதிர்க்கட்சிகளுக்கு சஜித் அழைப்பு



மக்கள் வழங்கியுள்ள ஆணையின் பிரகாரம் அந்த ஆணைக்கு மதிப்பளித்து எதிர்க்கட்சிகளை ஒன்றிணைத்து அதற்குரிய தலைமைத்துவத்தை வழங்கத் தயார் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ அறிவித்துள்ளார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் முடிவுகள் தொடர்பில் அவர் இன்று விசேட அறிவிப்பொன்றை வெளியிட்டுள்ளார். அந்த அறிவிப்பிலேயே மேற்படி விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:- 03

# கெஹலிய மீளக் கைது!



முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல மீண்டும் இலஞ்ச, ஒழிப்பு ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்டுள்ளார். 03

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**கூட்டமைப்பில்...**

இலங்கைத் தமிழரசுக் கட்சி வடக்கு, கிழக்கில் 58 சபைகளில் போட்டியிட்டது. இந்த 58 சபைகளில் 10 இற்கும் மேற்பட்ட சபைகள் தமிழர்களுக்குப் பெரும்பான்மை இல்லாத சபைகளாகக் காணப்படுகின்றன. குறைந்தது 40 சபைகளில் நாங்கள் நிர்வாகங்களை அமைப்பதற்கு ஏற்ற வகையில் முடிவுகள் வெளிவந்திருக்கின்றன.

யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தல் முடிவடைந்து ஆறு மாத காலங்களுக்குள் தமிழ் மக்கள் மீண்டும் இலங்கைத் தமிழரசுக் கட்சி மீது நம்பிக்கையை வைத்திருக்கின்றார்கள் என்பது தெளிவாகப் பிரதிபலிக்கப்பட்டிருக்கின்றது.

நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு தவறான விம்பம் ஒன்று ஏற்பட்டது. 25 சதவீதமான வாக்கைப் பெற்ற தேசிய மக்கள் சக்திக்கு யாழ்ப்பாணம் தேர்தல் தொகுதியில் உள்ள ஆறு ஆசனங்களில் 3 ஆசனங்கள் கிடைத்திருந்தன. 25 சதவீதமான வாக்குகளைப் பெற்ற கட்சிக்கு 50 சதவீதமான ஆசனங்கள் கிடைத்திருந்தன. அதனை வைத்துக்கொண்டு தேசிய மக்கள் சக்தியினர் யாழ்ப்பாணம் தேர்தல் மாவட்டத்தில் தமிழ் மக்களுடைய ஆணை தங்களுக்கு வந்துவிட்டது என அவர்கள் கூறித்திரிந்தார்கள்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி மட்டக்களப்பில் பெரு வெற்றி பெற்றிருந்தது. அதுபோல் உள்ளூராட்சித் தேர்தலிலும் பெரு வெற்றிபெற்றிருக்கின்றது. வடக்கில் வவுனியா மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் பெரு வெற்றியைப் பெற்றிருக்கின்றோம். வவுனியா மாவட்டத்தில் பின்னடைவு ஏற்பட்டதற்கான காரணங்களை அறிந்து உடனடியாக அதனை நிவர்த்தி செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் எடுப்போம்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் ஒரு மாற்றம் நிகழ்ந்ததாகச் சொன்னார்கள். ஆனால், ஆறு மாதங்களுக்குள் மீண்டும் ஒரு மாற்றம் இடம்பெற்றிருக்கின்றது. இதற்குக் காரணம், தமிழ் மக்களினுடைய அடையாளம் எந்தக் காலத்திலும் விட்டுக்கொடுக்க முடியாதது என்பது நாடாளுமன்றத் தேர்தலுக்குப் பிற்பாடு மக்களினுடைய மனதில் ஆழமாகப் பதிந்துள்ளது. அது இந்தத் தேர்தலில் வெளிவந்திருக்கின்றது.

உள்ளூராட்சி மன்றங்களில் ஆட்சி அமைக்கின்றபோது ஏனைய தமிழ்க் கட்சிகளுடனும் பேசி முடிவுகளை எடுப்போம். உள்ளூராட்சி மன்றங்களுக்கு இருக்கின்ற அதிகாரங்களைப் பயன்படுத்தி மக்களுக்குத் தேவையான சேவைகளை மேற்கொள்ளுவோம். எங்கள் கட்சிகளிலிருந்து தெரிவாகிய உறுப்பினர்களுக்கு விசேட பயிற்சிகளை வழங்கி அனைத்து சபைகளிலும் திறமையான நிர்வாகங்களை மேற்கொள்வோம்.

கடந்த 2018ஆம் ஆண்டு உள்ளூராட்சி சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகப் போட்டியிட்டதைவிட இந்தத் தேர்தலில் தமிழரசுக் கட்சி தனியாகப் போட்டியிட்டு பெற்ற முடிவுகள் பெறுமதியானவை. இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தல் முறைமையில் ஒரு கட்சியாகப் போட்டியிடுவதைத் தவிர்த்து ஒன்றாக இருக்கும் கட்சிகள் தனித்தனியாக போட்டியிட்டுப் பின் ஒன்றாகச் சேர்ந்து நிர்வாகங்களை அமைப்பது சிறந்தது என்பது இப்போது பலருக்குப் புரியும்.

ஆகவே கட்சியை உடைத்து விட்டோம், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உடைத்து விட்டோம் எனச் சொல்பவர்களுக்கு இந்தத் தேர்தல் முடிவுகள் சரியான பாடத்தைப் புகட்டியுள்ளது. இலங்கைத் தமிழரசுக் கட்சியும் பலவீனமடையவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகச் சேர்ந்திருந்ததை விட தனியாகப் போட்டியிட்டுப் பலமான கட்சியாக மாறியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தவர்கள் தற்போது ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியாக இயங்குகின்றார்கள். அவர்கள் எங்களுக்கு ஆதரவளிக்கும்போது பெரும்பாலான இடங்களில் நிர்வாகத்தை அமைக்கக் கூடியதாக இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உடைந்துவிட்டது என்ற செய்தியை ஆரம்பத்தில் இருந்தே மறுத்திருக்கின்றேன். ஏனெனில் கடந்த நாடாளுமன்றக் காலம் முடிவடையும் வரையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாகவே நாடாளுமன்றக் குழு இயங்கி வந்தது. ஆனால், தேர்தல் வந்தபோது தனித்துப் போட்டியிட்டார்கள். உண்மையில் நாடாளுமன்றத் தேர்தலில் தனித்துப் போட்டியிடுவது தவறானது. உள்ளூராட்சி சபைத் தேர்தலிலேயே தனித்துப் போட்டியிடுவது பயனுள்ளதாக அமையும் என்பது இந்தத் தேர்தலில் நிரூபணமாகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் இருந்தவர்கள் சேர்ந்து இயங்க வேண்டிய நேரம் வந்துள்ளது. குறிப்பாக எங்களுடைய பிரதேசத்தில் ஆறாயிரம் ஏக்கர் காணிகள் பறிபோகின்ற சூழல் உருவாகியுள்ளது. நான் இது தொடர்பில் முன்னரும் குறிப்பிட்டிருந்தேன். மக்களின் ஆணையோடு ஜனாதிபதிக்கும், அரசுக்கும் ஒரு கோரிக்கையை முன்வைக்கின்றேன். மக்களின் காணிகளைச் சுவீகரிக்கும் வர்த்தமானி அறிவித்தலைஉடனடியாகமீளக்கைவாங்குமாறு கோருகின்றேன். மே மாதம் 28ஆம் திகதி வரை அரசுக்குக் காலக்கெடு கொடுத்திருக்கின்றேன்.

மே 28ஆம் திகதிக்கு முன்னர் அரசு குறித்த வர்த்தமானியை மீளப்பெறாது விட்டால் இதற்கு எதிரான பாரிய போராட்டம் ஒன்றை நிகழ்த்துவோம். இந்நிலையில் ஏனைய தமிழ்க் கட்சிகளுக்கும் ஒரு அறிவிப்பை விடுக்கவுள்ளேன். வர்த்தமானி அறிவிப்புக்கு எதிராக இணைந்து செயற்பட வேண்டும்.

கடந்த நாடாளுமன்றத்திலேயே மாகாண சபைகள் திருத்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டிருக்க வேண்டும். ஆனால், அது சில காரணங்களால் நிறைவேற்ற முடியாமல் போனது. ஆனால், தற்போதய நாடாளுமன்றத்தில் மாகாண சபைகள் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவர நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் முயற்சித்தபோது, அதனை அரசே கொண்டுவரும் என்ற வாக்குறுதியை ஜனாதிபதி அநுர வழங்கியிருந்தார். எனினும், ஆறு மாதங்கள் தாண்டிய போதும் அதில் எதுவித முன்னேற்றமும் இல்லை.

இந்நிலையில் கடந்த மார்ச் மாதம் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் முன்னர் நான் கொண்டுவந்த அதே தனிநபர் சட்டமூலத்தைத் தனது தனிநபர் சட்டமூலமாகக் கொண்டு வருவதற்கான அறிவித்தலை நாடாளுமன்றத்திடம் கொடுத்திருக்கின்றார். எனவே, அடுத்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரில் அந்தச் சட்டமூலம் கொண்டுவரப்படும். அந்தத் திருத்தத்தை மேற்கொண்டால் உடனடியாகவே மாகாண சபைத் தேர்தலை நடத்த முடியும். மாகாண சபைத் தேர்தலை உடனடியாக நடத்த வேண்டும் என்பது எங்களுடைய வேண்டுகோளாக உள்ளது.

யாழ்ப்பாணம் மாநகர சபையைப் பொறுத்தவரையில் இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே அதிகளவான ஆசனங்கள் கிடைக்கப்பெற்றன. ஆகையினால் மாநகர மேயர் பதவி இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கே உரித்தானது. ஏனைய கட்சிகள் அதனை அனுசரித்து எமக்கான ஆதரவைக் கொடுக்க வேண்டும் என்பது எங்களுடைய வேண்டுகோள். மாநகர மேயர் யார் என்பது குறித்து இதுவரை தீர்மானிக்கவில்லை.

சாவகச்சேரி நகர சபையில் இலங்கைத் தமிழரசுக் கட்சி அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சிகள் இரண்டுக்கும் சமனான ஆசனங்கள் கிடைத்திருக்கும் நிலையில் ஏனைய கட்சிகளே யார் ஆட்சியமைக்க வேண்டும் என்பதைத் தீர்மானிக்கக்கூடியதாக இருக்கும்.

வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியினர் கணிசமான ஆசனங்களைப் பெற்றிருக்கின்றார்கள். அது தொடர்பிலும் நாம் ஆராய வேண்டும். தேசிய மக்கள் சக்தியினரால் சில வாக்குறுதிகள் கொடுக்கப்பட்டதாகவும், தேர்தல் விதிமுறைகள் மீறப்பட்டதாகவும் தகவல்கள் கிடைத்திருக்கின்றன. அது தொடர்பிலும் ஆராய்வோம்.

தேர்தல் காலங்களில் இடம்பெற்ற விதிமுறை மீறல்களுக்கான நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் பலமான அழுத்தத்தைக் கொடுப்போம். விதிமுறை மீறல்களில் ஈடுபட்டவர்கள் மேல் தேர்தல் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்தேயாக வேண்டும். அவர்கள் எடுக்கும் நடவடிக்கைகளைப் பொறுத்தே இந்த ஆணைக்குழு

சுயாதீனமானதா? இல்லையா? என்பதை மக்கள் தீர்மானிப்பார்கள்." – என்றார்.

---

**எதிர்க்கட்சிகளுடன்...**

நிறுவப்போவதில்லை என்று அந்தக் கட்சியின் நிறைவேற்றுக் குழு உறுப்பினரும் ஜே.வி.பியின் பொதுச்செயலாளருமான ரில்வின் சில்வா இன்று புதன்கிழமை ஊடக சந்திப்பில் தெரிவித்தார்.

இருப்பினும், தேசிய மக்கள் சக்தியுடன் இணைந்து பணியாற்ற விரும்பும் தனிநபர்களின் சுயாதீனக் குழுக்களைத் தமது கட்சி பரிசீலிக்கும் என்றும் அவர் கூறினார்.

தேசிய மக்கள் கட்சி பெரும்பான்மை உறுப்பினர்களைப் பெற்ற சபைகளில் ஆட்சியை நிறுவும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அதேவேளை, பெரும்பான்மை உறுப்பினர்களைப் பெற்ற ஏனைய கட்சிகள் அந்தந்தச் சபைகளில் ஆட்சியை நிறுவ வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# உள்ளூராட்சி சபைத் தேர்தல்: வவுனியா மாவட்டத்தின் முடிவு

### வவுனியா மாநகர சபை

| | |
|---|---|
| ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணி | - 2,350 - 4 |
| தேசிய மக்கள் சக்தி | - 2,344 - 4 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | - 2,293 - 4 |
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | - 2,185 - 3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | - 1,088 - 2 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | - 647 - 1 |
| ஜனநாயகத் தேசியக் கூட்டணி | - 630 - 1 |
| சுயாதீனக் குழு 1 | - 332 - 1 |
| சுயாதீனக் குழு 2 | - 326 - 1 |

### வவுனியா வடக்கு பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | - 2,650 - 6 |
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | - 2,210 - 5 |
| அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் | - 1,696 - 4 |
| ஜனநாயகத் தமிழ்க் தேசியக் கூட்டணி | - 1,255 - 3 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | - 967 - 2 |
| ஐக்கிய மக்கள் சக்தி | - 956 - 2 |
| சர்வஜன அதிகாரம் | - 317 - 1 |

### வெங்கல செட்டிகுளம் பிரதேச சபை

| | |
|---|---|
| ஐக்கிய மக்கள் சக்தி | - 2,838 - 4 |
| தேசிய மக்கள் சக்தி | - 2,085 - 3 |
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | - 1,95 - 3 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | - 1,661 - 2 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | - 1,573 - 2 |
| ஜனநாயகத் தேசியக் கூட்டணி | - 1,225 - 2 |
| ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் | - 626 - 1 |
| சுயாதீனக் குழு 2 | - 340 - 1 |

### வவுனியா தெற்கு (சிங்கள) பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | - 3,645 - 7 |
| ஐக்கிய மக்கள் சக்தி | - 1,844 - 4 |
| சர்வஜன அதிகாரம் | - 758 - 1 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | - 662 - 1 |
| சுயாதீனக் குழு 2 | - 606 - 2 |
| ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன | - 436 - 1 |
| ஐக்கிய தேசியக் கட்சி | - 338 - 1 |

### வவுனியா தெற்கு (தமிழ்) பிரதேச சபை

| | |
|---|---|
| தேசிய மக்கள் சக்தி | - 7,260 - 6 |
| இலங்கைத் தமிழரசுக் கட்சி | - 7,033 - 5 |
| ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி | - 3,949 - 3 |
| ஐக்கிய மக்கள் சக்தி | - 3,870 - 3 |
| ஸ்ரீலங்கா தொழிலாளர் கட்சி | - 3,436 - 2 |
| ஜனநாயகத் தேசியக் கூட்டணி | - 2,075 - 2 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - 1,901 - 1 |
| தமிழ் மக்கள் கூட்டணி | - 1,482 - 1 |
| சுயாதீனக் குழு 2 | - 1,285 - 1 |
| ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி | - 1,173 - 1 |
| சர்வஜன அதிகாரம் | - 1,123 - 1 |
| சுயாதீனக் குழு 3 | - 768 - 1 |

# சரணடைந்த பிரசன்ன ரணவீரவுக்கு 19 ஆம் திகதி வரை விளக்கமறியல்

முன்னாள் இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர எதிர்வரும் 19 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

போலி ஆவணங்களைத் தயாரித்து கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள அரச காணி ஒன்றை விற்பனை செய்த சம்பவம் தொடர்பில், பிரசன்ன ரணவீர




வைக் கைது செய்ய திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில் தலைமறைவாகியிருந்த பிரசன்ன ரணவீர இன்று காலை மஹர நீதிவான் நீதிமன்றத்தில் சரணடைந்திருந்த நிலையிலேயே, நீதிவான் மேற்படி உத்தரவை பிறப்பித்துள்ளார்.

# மின்னல் தாக்கியதில் விவசாயி உயிரிழப்பு

## புதுக்குடியிருப்பில் துயரம்



(பா.சதீசன்)

வயலில் வேலை செய்துகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

தற்போது சீரற்ற காலநிலை நிலவி வரும் நிலையில் இன்று முல்லைத்தீவு – புதுக்குடியிருப்பு பிரதேச செயலகத்துக்குட்பட்ட கள்ளியடி வயலில் வேலை செய்துகொண்டிருந்த குடும்பஸ்தர் ஒருவர் மின்னல் தாக்கத்துக்கு இலக்காகி உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து அந்தக் குடும்பஸ்தரின் சடலம் புதுக்குடியிருப்பு பிரதேச ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் அருமைநாயகம் யசோதரன் எனும் 42 வயது மதிக்கத்தக்க குடும்பஸ்தரே உயிரிழந்துள்ளார்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**ஓரணியில்...**

"ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களில் இரு பெரும் மக்கள் ஆணைகளைப் பெற்ற இந்த அரசு, 6 மாதங்கள் என்ற குறுகிய காலத்தில் மிகப் பெரிய சரிவைச் சந்தித்துள்ளது.

எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்பினர்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு செயற்பட வேண்டும் என்ற செய்தியை நாட்டு மக்கள் தேர்தலின் ஊடாக முன்வைத்துள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தலைக் கையாண்டது போலவே இந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலையும் ஜே.வி.பி. கையாண்டது. தேர்தலுக்காக மதம் கூட பயன்படுத்தப்பட்டது.

நாட்டு மக்கள் இப்போது பொய்களுக்கு முற்றுப்புள்ளி வைத்துள்ளனர். எனவே, பொய்களை முறியடித்து, உண்மையான பலம் வாய்ந்த மக்கள் சேவைக்காக எதிர்க்கட்சியைச் சேர்ந்த சகல தரப்புகளும் ஒன்றிணைய வேண்டும் என்ற பொது மக்களின் கருத்தின் அடிப்படையில் இந்தச் சவாலான பொறுப்புக்குத் தலைமை வழங்க ஐக்கிய மக்கள் சக்தி தயாராக உள்ளது." – என்றுள்ளது.

**கெஹலிய...**

வாக்குமூலம் அளிக்க இன்று ஆணைக்குழுவில் அவர் முன்னிலையானபோது அவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட முன்னாள் அமைச்சர் கொழும்பு தலைமை நீதிவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படவுள்ளார்.



# வவுனியாவில் மூவாயிரம் நாள்களை எட்டிய காணாமல் போன உறவுகளின் போராட்டம்!

(கி.வசந்தன்)

தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தினரால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டம் இன்றுடன் மூவாயிரம் நாள்களை எட்டியுள்ள நிலையில் கவனவீர்ப்பு ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

இறுதிப் போரின் போதும், அதற்கு முன்னரும் காணாமல் போன தமது உறவுகளின் உண்மை நிலையை வலியுறுத்தி தமிழர் தாயக காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தினரால் வவுனியா அஞ்சல் அலுவலகத்திற்கு அருகில் சுழற்சி முறை உணவு தவிர்ப்பு போராட்டம் கடந்த 8 வருடங்களுக்கு முன்பாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்நிலையில் போராட்டம் ஆரம்பித்து இன்றுடன் மூவாயிரம் நாள்களைக் கடக்கின்ற நிலையில் அவர்களது போராட்டம் தீர்வின்றி தொடர்ந்து செல்கின்றது. இதனையடுத்து, அவர்களால் கவனவீர்ப்பு ஆர்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது. ஆர்பாட்டத்தில் ஈடுபட்ட அவர்கள் ஐரோப்பிய நாடுகள் மற்றும் அமெரிக்கக் கொடிகளை ஏந்தியிருந்ததமையுடன், தங்களுக்கு சர்வதேச நீதி வேண்டும் என்பதை வலியுறுத்தியிருந்தனர்.






# நம்மை நாமே ஆள வேண்டும் என்ற ஒரே நோக்கில் வாக்களித்த மக்களுக்கு நன்றி கூறுகின்றார் சாள்ஸ்

(வாஸ் கூஞ்ஞ)

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் சலுகைகளுக்கு விலை போகாது தன்மானத்துடன் உரிமைக்கும் தேசியத்திற்கும் முன்னுரிமை கொடுத்து நம்மை நாமே ஆளவேண்டும் என்ற ஒரே சிந்தனையில் வாக்களித்த மக்களுக்கு முன்னாள் வன்னி நாடாளுமன்ற உறுப்பினரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மன்னார் மாவட்ட அமைப்பாளருமான இ.சாள்ஸ் நிர்மலநாதன் நன்றி தெரிவித்துள்ளார்.

நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி மன்ற தேர்தலில் மன்னார் மாவட்டத்தில் அதிகமான இடங்களை வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட இலங்கை தமிழரசுக் கட்சி வென்றுள்ளது.



இத் தேர்தலில் சலுகைகளுக்கு விலைபோகாது தன்மானத்துடன் உரிமைக்கும் தேசியத்திற்கும் முன்னுரிமை கொடுத்து நம்மை நாமே ஆள்ச்வேண்டும் என்ற ஒரே சிந்தனையில் வாக்களித்து தமிழரசின் வெற்றியை தமிழர் தாயகம் எங்கும் நிலைநிறுத்திய எம் உறவுகளுக்கு முதற்கண் நன்றிகள்.

இந்த வெற்றிக்காக எம்முடன் உழைத்த கட்சி அங்கத்தவர்கள் , கிராம மட்ட நலன் விரும்பிகள் மற்றும் தமிழரசின் ஆதரவாளர்கள் அனைவருக்கும் நன்றிகள் .

குறிப்பாக தெரிவு செய்யப்பட்ட உறுப்பினர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

உங்களுடைய கிராமங்களின் வளர்ச்சிக்காகவும் மாவட்டத்தைப் பாதுகாப்பதற்காகவும் குறிப்பாக தமிழ் தேசியத்தை நிலைநிறுத்துவதற்காகவும் உங்களுடைய சமூக சேவைகளை மக்கள் நலன் சார்ந்து தொடர்ச்சியாக முன்னெடுங்கள்.

அதுவே உங்களுடைய கடமை என்பதை நினைவில் கொள்ளுங்கள்.

– என வெற்றியீட்டிய உறுப்பினர்களுக்கு தனது ஆலோசனைகளையும் அவர் முன்வைத்துள்ளார்.



# கல்முனை கார்மேல் பத்திமா கல்லூரி வலைப்பந்தாட்ட, எறிபந்தாட்ட போட்டி!

## ஐந்து பிரிவுகளில் சம்பியன்கள்

(நூருல் ஹுதா உமர்)

கல்முனை கல்வி வலய கல்முனை கார்மேல் பத்திமா கல்லூரி 125 ஆவது ஆண்டு நிறைவினை சிறப்பித்துக் கொண்டிருக்கும் இவ்வேளையில் கல்முனை வலய மட்ட பாடசாலைகளுக்கு இடையிலான வலைப்பந்தாட்டம் மற்றும் எறிபந்தாட்டப் போட்டிகளில் ஐந்து பிரிவுகளில் சம்பியன்களைப் பெற்றுக்கெண்டன.

இதில் 16,18 வயதுக்கு உட்பட்ட பெண் மாணவர்களுக்கான வலைப் பந்தாட்டப் போட்டிகள், 17,20 வயதுக்கு உட்பட்ட பெண் மாணவர்கள் மற்றும் 17 வயதுக்கு உட்பட்ட ஆண் மாணவர்களுக்கான எறிபந்தாட்டப் போட்டிகளில் இந்த பாடசாலையின் அணிகள் சம்பியன்களை ஈட்டியுள்ளன. மாகாண மட்டப் போட்டிக்கும் தெரிவு செய்யப் பட்டுள்ளன.

வலைப்பந்தாட்ட மாணவர்களின் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த உடற்கல்வி ஆசிரியர் திருமதி ஹயாளினி சிவாகரனுக்கும், பயிற்றுவிப்பாளரான க.தரிஷாந்தனுக்கும் , எறிபந்தாட்டப் போட்டியின் பயிற்சிக்கு பொறுப்பாக இருந்த அருட். சகோ.ஏ.தேவராஜாவுக்கும் வெற்றி ஈட்டிய மாணவர்களுக்கும் மற்றும் ஒத்துழைப்பு வழங்கிய அதிபர், பிரதி அதிபர்கள், உப அதிபர்கள், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள், பாடசாலையின் பழைய மாணவர் சங்கம், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் மற்றும் போட்டியில் பங்குபற்றுவதற்கு மாணவர்களை ஊக்கமளித்த பெற்றோர்களுக்கும் பாடசாலை சமூகம் வாழ்த்துக்களையும், பாராட்டுக்களையும் தெரிவித்துள்ளது.









# வவுனியா மாநகரசபையில் ஒரு வட்டாரத்திலும் கூட வெற்றி பெறாது தோல்வியடைந்த தமிழரசுக் கட்சி

(கி.வசந்தன்)

நடந்து முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கை தமிழரசுக் கட்சி வவுனியா மாநகர சபையில் ஒரு வட்டாரத்தில் கூட நேரடியாக வெற்றி பெறாது பின்னடைவைச் சந்தித்துள்ளது.

வடக்கு – கிழக்கு உள்ளிட்ட தமிழ் பகுதிகளில் தேசிய மக்கள் சக்தியை பின்தள்ளி இலங்கை தமிழரசுக் கட்சி வெற்றி பெற்றுள்ளது. எனினும் வடக்கின் நுழைவாயிலாக விளங்கும் வவுனியா மாநகர சபையில் கடந்த முறை தமிழரசுக் கட்சி 6 உறுப்பினர்களை கொண்டிருந்த போதும் இம்முறை ஒரு வட்டாரத்தில் கூட வெற்றி பெறவில்லை.

அத்துடன், தேசிய மக்கள் சக்தி, ஜனநாயக தமிழ் தேசியக் கூட்டணி, இலங்கை தொழிலாளர் கட்சி என்பன தலா நான்கு ஆசனங்களைப் பெற்று வட்டாரங்களில் ஆதிக்கம் செலுத்தியுள்ளன.

இலங்க தமிழரசுக் கட்சி விகிதாசார அடிப்படையில் போனஸ் ஆசனம் மூன்றினை வவுனியா மாநகர சபையில் பெற்றுள்ளது. கிளிநொச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் தலைமையில் பாரிய வெற்றியை தமிரசுக் கட்சி பெற்றுள்ளதுடன், மட்டக்களப்பில் நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் தலைமையிலும், முல்லைத்தீவில் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் தலைமையிலும், மன்னாரில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிரமலநாதன தலைமையிலும், யாழ்ப்பாணத்தில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தலைமையிவும் வெற்றிகளை பதிவு செய்த போதும் வவுனியாவில் எந்தவொரு சபையில் ஆட்சி அமைக்கக் கூடிய ஆசனங்களையோ அல்லது அதிகபட்ச ஆசனங்களையோ தமிழரசுக் கட்சி பெறவில்லை என்பதுடன், முதல் நிலையையும் பிடிக்கவில்லை.

அத்துடன், வன்னியில் தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ப.சத்தியலிங்கம் வசிக்கும் மாநகர சபையில் வட்டாரங்களில் தோல்வி யடைந்து பட்டியல் ஆசனம் 3 ஐ மட்டும் பெற்றுக் கொண்டமை வவுனியாவில் கட்சியின் கட்டமைப்பு மறுசீரமைக்கப்பட வேண்டியதன் அவசியத்தை வெளிப்ப டுத்துவதாக கட்சி ஆதரவாளர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, கடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் வன்னித் தேர்தல் தொகுதி யில் உள்ள வவுனியா மாவட்டத்திவ்தமிழரசுக்கட்சி பாரிய பின்னடைவை சந்தித்து இருந்தமை குறிபபிடத்தக்கது.




# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தமிழ்க் கட்சிகளின் பொறுப்பு

நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசியம் மீண்டெழுந்திருக்கின்றது. சாதாரண எழுச்சி அல்ல. ஊன்றிக் கவனித்தால் இது சீற்றத்துடனான மீளெழுகை என்பது புரியும்.

தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிக்கும் கட்சிகள் தங்களுக்குள் பிளவுண்டு, முரண்பட்டு நின்றமையால் அதிருப்தி அடைந்த தமிழ் மக்கள் புதிய - மாற்று - தரப்பு என்று நினைந்து தேசிய மக்கள் சக்திக்கு நாடாளுமன்றத் தேர்தலில் வாக்களித்தனர். அதனால் கடந்த ஆறு மாதங்களில் கிட்டிய அனுபவத்தின் அடிப்படையில், தங்களைச் சுதாகரித்துக் கொண்டு, இந்தச் சீற்ற எழுச்சியை நேற்றுத் தமது வாக்குகள் மூலம் பிரதிபலித்திருக்கிறார்கள்.

எது, எப்படியாயினும், தமிழ்த் தேசியத்தைப் பிரதிபலிக்கும் விதத்தில் தமிழ் மக்கள் காட்டியிருக்கும் இந்த வெளிப்பாட்டுக்கு சரியான முறையில் தங்கள் செயற்பாட்டை காட்ட வேண்டிய கடப்பாடு தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகளுக்கு வந்திருக்கின்றது.

இப்போது பந்து அந்தக் கட்சிகளின் களத்துக்குள். அவை எப்படி விளையாடப் போகின்றன என்பது தான் கேள்வி.

இன உணர்வின் அடிப்படையில் தமிழ் மக்கள் அளித்த இந்தத் தீர்ப்பின் காத்திரத்தைப் புரிந்து கொண்டு தமிழ்த் தேசியக் கட்சிகள் தங்களுக்குள் ஒற்றுமையாக - ஒன்றிணைந்து - இந்த உள்ளூராட்சி சபைகளின் நிர்வாகத்தைக் கொண்டு நடத்த வேண்டும்.

தேர்தலுக்கான முரண்பாடுகளையும், கருத்து வேற்றுமைகளையும் வாக்களிப்போடு முடித்துவிட்டு, மக்கள் நலனுக்காக சபைகளை சீரிய முறையில் கொண்டு நடத்துவதில் அவை ஐக்கியம் காட்ட வேண்டும். அப்படி செயல்பட்டால்தான் இனி வரக்கூடிய மாகாண சபை தேர்தலிலும் தமிழ் மக்கள் தேசியத்தைப் பற்றி நிற்பார்கள் என்பதை தமிழ் தேசியம் வலியுறுத்தும் கட்சிகள் பொறுப்புணர்வோடு கவனத்தில் கொள்ள வேண்டும்.

உள்ளூராட்சி தேர்தல் முறைமைகளுக்கு அமைய, தமிழ்த் தேசியக் கட்சிகள் ஐக்கியப்பட்டு தேர்தலில் போட்டியிடாமல், பிரிந்து நின்று தனித்தனி அணிகளாகப் போட்டியிட்டால், அதிக ஆசனங்களைக் கைப்பற்ற முடியும் என்ற சுமந்திரனின் முன்னைய வழிகாட்டல் எவ்வளவு தூரம் சரியானது என்பது இந்தத் தேர்தல் முடிவுகள் ஊடாக எல்லோராலும் உணர்ந்து கொள்ளக் கூடியதாக இருக்கின்றது.

இந்தப் பிரிவினையை - பிரிந்து நிற்கின்ற பண்பை - தேர்தல் வாக்களிப்போடு நிறுத்திக் கொண்டு, சபையின் நடவடிக்கைகளை முழு ஆட்சிக்காலமும் சிக்கலின்றி முன்னெடுப்பதற்கு தமிழ் தேசியக் கட்சிகள் புரிந்துணர்வோடும், விட்டுக்கொடுப்போடும், நல்லிணக்கத்தோடும் சபைகளில் செயல்படுவது மிக முக்கியமாகும்.

அதற்கேற்ற வகையில் இந்தச் சபைகளுக்கு தெரிவான தங்கள் உறுப்பினர்களை கட்சித் தலைவர்கள் வழிநடத்துவதும் கட்டாயப் பொறுப்பாகும்.



# மட்டக்களப்பில் தமிழரசு வெற்றிக் கொண்டாட்டம்

(வாலகிருஸ்ணா)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கைத் தமிழரசுக்கட்சி பல்வேறு உள்ளூராட்சி மன்றங்களையும் வெற்றி கொண்டதையடுத்து நேற்று இரவு ஆதரவாளர்கள் பட்டாசு கொழுத்திக் கொண்டாடியமையுடன் வெற்றிபெற்ற வேட்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவித்து, அவர்களை ஊர்வலமாகவும் கொண்டு சென்றனர்.

நேற்று நடைபெற்ற உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாநகரசபை உட்பட பல்வேறு உள்ளூராட்சிமன்றங்களிலும் இலங்கைத் தமிழரசுக்கட்சி வெற்றிவாகை சூடியுள்ளது.

மட்டக்களப்பு மாநகரசபையின் 20 வட்டாரங்களில் 16 வட்டாரங்களை இலங்கை தமிழரசுக்கட்சி கைப்பற்றிய நிலையில் வெற்றிபெற்ற வேட்பாளர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கும் வகையிலான மகிழ்ச்சிக் கொண்டாட்டங்கள் நடைபெற்றுவருகின்றன.

மட்டக்களப்பு மாநகரசபையின் பல்வேறு வட்டாரங்களிலும் நேற்று மாலை வெற்றி கொண்டாட்டங்கள் நடைபெற்றன.

இதேபோன்று ஏறாவூர்ப்பற்று பிரதேசபை தேர்தலில் இலங்கை தமிழரசுக்கட்சி வெற்றிபெற்றதையடுத்து அங்கு ஆதரவாளர்கள் மகிழ்ச்சி கொண்டாட்டத்தில் ஈடுபட்டனர்.

இலங்கை தமிழரசுக்கட்சியின் சார்பில் போட்டியிட்டு அதிகூடிய வாக்குகளைப்பெற்ற இலங்கை தமிழரசுக்கட்சியின் வேட்பாளரும் ஊடகவியலாளருமான செ.நிலாந்தனின் ஆதரவாளர்களினால் தமிழரசுக்கட்சி சின்னம் கொண்ட கேக்வெட்டப்பட்டு வெற்றிக் கொண்டாட்டம் நடாத்தப்பட்டது.









# கதிர்காம பாதயாத்திரிகருக்கு சந்நிதியான் ஆச்சிரம உதவிகள்

கதிர்காம பாதயாத்திரிகருக்கு சந்நிதியான் ஆச்சிரமத்தால் இயக்கச்சி, கரந்தாய் பிள்ளையார் ஆலயத்தில் வைத்து உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

சைவமரபு – பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரிகரை பளை – கரந்தாய் கிராமத்தில் அமைந்துள்ள பிள்ளையார் ஆலயத்தில் வைத்து தேநீர் பொருள்கள் மற்றும் சவர்க்கார வகைகள், பிஸ்கட் வகைகள் என்பனவற்றை ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தொண்டர்களுடன் நேரடியாகச் சென்று வழங்கி வைத்தார்.

இந்த உதவித் திட்டம் ஞாயிற்றுக் கிழமை வழங்கப்பட்டது.



# தென் கிழக்கு பல்கலையில் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(பாறுக் ஷிஹான்)

புவியியல் தரவுகளை சேகரிப்பு, பகுப்பாய்வு மற்றும் காட்சிப்படுத்தல் தொடர்பான அடிப்படை கருத்துகள், கருவிகள் மற்றும் பயன்பாடுகளை அறிமுகப்படுத்தும் குறுகிய காலக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்வு புவியல் துறையின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே. நிஜாமிர் தலைமையில் இடம்பெற்றது.

பிராந்தியத்தின் கல்வி மேன்பாட்டில் தென்கிழக்கு பல்கலைக்கழகம் பல்வேறு குறுங்கால கற்கை நெறிகளையும் முன்னெடுத்துவரும் சந்தர்ப்பத்தில், பல்கலைக்கழகத்தின் மூத்த பீடங்களில் ஒன்றான கலை கலாச்சார பீடமும் பல்வேறு குறுங்கால கற்கைநெறிகளை முன்னெடுத்து வருகின்றது.



அதன் அடிப்படையில் புவியல்துறை ஆரம்பித்துள்ள கற்கைகளை பூர்த்தி செய்த மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் இந்த நிகழ்வுக்குப் பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீதின் ஆலோசனையின் கீழ் கலை கலாச்சார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் கௌரவ அதிதியாக கலந்துகொண்டு உரையாற்றியதுடன் சான்றிதழ்களையும் வழங்கி வைத்தார்.

விரிவுரையாள ஏ.எல். ஐயூப், சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம். கலில், சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச். முகம்மட் றினோஸ் ஆகியோரும் துறை சார்ந்த உரைகளை நிகழ்த்தினர்.

விரிவுரையாளர் எம்.எச்.எவ். நுஸ்கியாவின் நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவடைந்தது.

# தமிழரசும் தேசிய மக்கள் சக்தியும் ஆலையடிவேம்பில் சமநிலையில்!

## சுயேச்சை அணி துரும்புச் சீட்டாக

(வி.ரி. சகாதேவராஜா)

ஆலையடிவேம்பு பிரதேச சபைக்கான தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியும் தேசிய மக்கள் சக்தியும் 7:7 என்று சமநிலையில் ஆசனங்களைப் பெற்றுள்ளன.

அதைவிட சுயேச்சை குழு ஒன்று 02 ஆசனங்களைப் பெற்றுள்ளது.

16 உறுப்பினர்களைக் கொண்ட ஆலையடிவேம்பு பிரதேச சபையில் ஆட்சி அமைக்க இரு அணிகளும் சுயேச்சை அணியை நாடவேண்டிய நிலையில் உள்ளது.

ஆதலால் அங்கு சுயேச்சை அணி துரும்புச் சீட்டாக





மாறியுள்ளது. உப தவிசாளர் உள்ளிட்ட வலுவான கோரிக்கை முன்வைக்க இடமிருக்கிறது.

# திக்கம் வடிசாலைக்கு விடிவு பிறந்திருப்பதாக கருதுகிறேன்

## பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் கமலாகரன் தெரிவிப்பு

(த.சுபேசன்)

திக்கம் வடிசாலைக்கு தற்போது விடிவு காலம் பிறந்திருப்பதாகக் கருது கிறேன் என்று பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர் சபை உறுப்பினர் ந.கமலாகரன் தெரிவித்துள்ளார்.

பனை அபிவிருத்திச் சபையினுடைய தலைவர் திக்கம் வடிசாலை விவகாரம் தொடர்பில் கைதடியில் இருந்து வட மராட்சி –திக்கம் வரை நடை பயணம் ஒன்றை முன்னெடுத்திருந்த நிலை யிலேயே அவர் மேற்படி தெரிவித் திருந்தார்.

இது தொடர்பாக பணிப்பாளர் சபை உறுப்பினர் கமலாகரன் மேலும் கருத்துத் தெரிவிக்கையில்,

நாட்டில் ஏற்பட்ட மாற்றத்தைத் தொடர்ந்து பனை அபிவிருத்திச் சபை யில் நிகழ்ந்த மாற்றம் மகிழ்ச்சி யளிக்கின்றது.



நான் பனை அபிவிருத்திச் சபையில் கடந்த காலத்தில் பணியாற்றிய வேளை யில் திக்கம் வடிசாலை உருவாகி யிருந்தது.

திக்கம் வடிசாலை உருவாக்கத்தில் ஏராளமான தொழிலாளர்கள் அதிகாரி களின் பங்களிப்பு இருந்தது.

ஒரு சமூகத்தின் வளர்ச்சி மற்றும் எதிர்காலம் ஆகியன அதில் தங்கியிருந் தன. ஆனால் யுத்த நிலைமையில் அது நலிவடைந்தது.

யுத்த காலத்தின் பின்னர் திக்கம் வடிசாலையை மீட்டெடுத்திருக்க முடி யும்.ஆனால் கடந்த காலத்தில் அதனைச் செய்யவில்லை.

ஆனால் தற்போது திக்கம் வடிசாலைக்கு விடிவு காலம் பிறந்திருப்பதாகக் கருதுகிறேன்.

பனை அபிவிருத்திச்சபையினுடைய தலைவர் திக்கத்தின் பெருமையை மக்கள் உணர வேண்டும் என தனது 50 ஆவது வயதில் நடை பயணம் ஒன்றை முன்னெடுத்துள்ளார்.

இது ஒரு தொடரும் போராட்டமாகவே அமையும். இதற்கு மக்கள் மற்றும் பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் ஒத்துழைப்பு அவசியம்.- என்றார்.



# மட்டுவிலில் தேவைப்பாடுடைய குடும்பத்துக்கு வாழ்வாதார உதவி

(த.சுபேசன்)

சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகமும் ரோட்டராக்ட் கழகமும் இணைந்து அண்மையில் தென்மராட்சி, மட்டுவில் பகுதியைச் சேர்ந்த தேவைப் பாடுடைய குடும்பம் ஒன்றுக்கு வாழ்வா தார உதவியாக கோழிகளும் கோழிக் கூடும் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.

எலிபென்ற் எயிட் ஹெல்பிங் கியூ மன் அமைப்பின் நிதிப்பங்களிப்புடன் இந்த உதவித்திட்டம் வழங்கி வைக்கப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மத்தியமுகாம் பிரதேச உள்ளக வீதிகள்

# 4.5 மில்லியன் நிதி ஒதுக்கீட்டில் கொங்கிறீட் வீதிகளாகத் திருத்தம்

(நூருல் ஹுதா உமர் )

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸின் பி - 100 திட்டத்தின் கீழ் பல்வேறு வேலைத் திட்டங்களை மாவட்டம் முழுவதிலும் முன்னெடுத்து வருகிறார். அதன் ஒரு அங்கமாக மத்தியமுகாம் - நாவிதன் வெளி பிரதேச உள்ளக வீதிகள் மழை காலங்களில் மக்கள் பாவனைக்கு பொருத்தமற்றதாக இருந்தன. இந்த நிலையில் தனது பி - 100 திட்டத்தின் கீழ் நாவிதன்வெளி செயின் ஹாஜியார் வீதியை கொங்கிறீட் வீதிகளாக புனரமைக்க சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் நடவடிக்கை எடுத்திருந்தார்.

முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பி - 100 திட்டத்தின் கீழ் சுமார் 45 லட்சம் ரூபா செலவில் கொங்கிறீட் வீதிகளாக புனரமைக்கப்பட்டுள்ள இந்த வீதியை முன்னாள் இராஜாங்க அமைச்சர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் நேரில் சென்று பார்வையிட்டார்.

இந்தப் பிரதேசத்தில் முன்னெடுக்கவேண்டிய அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பில் ஆராய்ந்தார்.





# நலிவுற்றோருக்கு உலருணவுப் பொதிகள்!

(நடராஜன் ஹரன்)

யாழ்ப்பாணம் வடலியடைப்பு ஸ்ரீ ஐயப்பன் தேவஸ்தான சாஸ்தா பீடத்தின் ஏற்பாட்டில் வாராவாரம் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் நலிவுற்ற வர்களுக்கான உலர் உணவுப் பொதிகள் வழங்கப்பட்டு வருகின்றது.

நிகழ்வு நிறுவனர் கபிலன் அறக்கட்டளையின் ஏற்பாட்டில் இந்த வாரம் இடம்பெற்றது.

ஆலய பிரதம குரு சிவானந்த சர்மாவின் பூஜை வழிபாடுகளை தொடர்ந்து குருசாமி இ.கனோஸ் வழிகாட்டுதலில் தெரிவு செய்யப்பட்ட ஒரு தொகுதி பயனாளிகளுக்கு இந்தப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் இன்னும் பலர் காத்திருப்பு பட்டியலில் தங்களது பெயர் விவரங்களை பதிவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நல்லை ஆதீனத்தின் நினைவுப் பிரார்த்தனையும் அஷ்தி பிரதிஷ்டையும்



மறைந்த நல்லை திருஞான சம்பந்தர் ஆதீன இரண்டாவது குரு மகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகளின் நினைவுப் பிரார்த்தனையும் சுவாமிகளின் அஷ்தி பிரதிஷ்டையும் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நல்லை ஆதீன மண்டபதில் இடம்பெறவுள்ளன.

தொடர்ந்து நண்பகல் 12 மணிக்கு அன்னதானமும் இடம் பெறவுள்ளது என்று நல்லை ஆதீன ஆளுநர் சபை அறிவித்துள்ளது.












# மட்டக்களப்பு நகரில் குடிமனைப் பகுதிக்குள் உட்புகுந்த ஆறு அடி முதலை மடக்கி பிடிப்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு நகரப் பிரதேசத்துக்கு உட்பட்ட சின்ன ஊறணி பிரதேச குடி மனைக்குள் உட் புகுந்த 6 அடி கொண்ட முதலை ஒன்றை இன்று புதன்கிழமை அதிகாலையில் பிரதேச மக்கள் மடக்கி பிடித்து வனஜீவராசிகள் திணைக்களத் திடம் ஒப்படைத்தனர்.

அண்மைக் காலமாக மட்டக்களப்பில் தொடர்ச்சியாக குடிமனைப் பகுதிகளில் முதலைகள் உட்புகுந்து வரும் அதி கரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.






# கந்தளாய் பண்டாரநாயக்க கல்லூரிக்கு கற்றலுக்குத் தேவையான புத்தகங்கள்

(எஸ்.கீதபொன்கலன்)

மே -3 உலக ஊடக சுதந்திர தினத்தை முன்னிட்டுத் திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடக மன்றம் கந்தளாய் பண்டாரநாயக்க கல்லூரியின் நூலகத்துக்கு மாணவர்களின் கற்றலுக்கு தேவையான தொடர் பாடல் மற்றும் ஜனநாயகம் குறித்த புத்தகத் தொகுப்பை நன்கொடையாக வழங்கியது.

கங்கத்தலாவ ஐக்கிய ஊடகவியலாளர் மன்றத்தின் செயலாளர் உபாலி மனுசங்க காரியவசம் கல்லூரியின் அதிபர் திருமதி.வசந்த குமுதினியிடம் புத்தக தொகுப்பைக்க கையளித்தார்.



# உலக கை சுகாதார தினத்தை முன்னிட்டு சித்திரக் கண்காட்சி விழிப்புணர்வு நிகழ்வு

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

மே மாதம் 05 ஆம் திகதி உலக கை சுகாதார தினமாகும். இதனை முன்னிட்டு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை ஏற்பாடு செய்த சித்திரக் கண்காட்சி மற்றும் கை கழுவும் முறை குறித்த விழிப்புணர்வு நிகழ்வு கல்முனை வடக்கு ஆதார வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் குணசிங்கம் சுகுணன் தலைமையில் வைத்தியசாலை திறந்த வெளியில் இடம்பெற்றது.

இதன்போது ஆரம்ப சுகாதார நடவடிக்கைகளில் ஒன்றான கை சுகாதாரம் தொடர்பில் வைத்திய பணிப்பாளரால் தெளிவுபடுத்தபட்டது. கை கழுவும் செயல்முறை நேரடியாக செய்து காட்டப்பட்டு தெளிவுபடுத்தப்பட்டது.

இதேவேளை, கை சுகாதாரம் தொடர்பாக, வைத்தியசாலை உத்தியோகத்தர்களால் வரையப்பட்ட விழிப்புணர்வு சித்திர ஆக்கங்கள் கண்காட்சிக்காக வைக்கப்பட்டன.

இந்த சித்திர கண்காட்சியில் வரையப்பட்டிருந்த ஆக்கங்கள் குறித்தும் விளக்கமளிக்கப்பட்டது. சிறந்த ஆக்கங்கள் தெரிவு செய்யப்பட்டு பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.



இந்த விழிப்புணர்வு நிகழ்வில் வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் டாக்டர் தாஹிறா சபியுத்தீன், வைத்திய நிபுணர்கள், வைத்தியர்கள், நிர்வாக உத்தியோகத்தர், தாதிய உத்தியோகத்தர்கள், சுகாதார ஊழியர்கள், வைத்தியசாலை உத்தியோகத்தர்கள், பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# வேலோடுமலையில் மாபெரும் குபேர வேள்வி!

## அனைவரையும் அழைக்கிறார் சிவசங்கர் ஜீ

(வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் சித்ரா பௌர்ணமியில் மட்டக்களப்பு மாவட்டத்தின் சித்தாண்டி இலுக்குப் பொத்தானை வேலோடும் மலையில் அபூர்வ மூலிகைகளிலான ஒரு அற்புதமான குபேர மகா வேள்வி நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட் கிழமை சித்ரா பௌர்ணமி அன்று இந்த மாபெரும் வேள்வியைச் செய்ய இந்தியாவில் இருந்து ஒரு மாபெரும் குபேரயோகி, குபேர குருஜி ஸ்டார் ஆனந்த் ஐயாஅவரது குழுவினருடன் வருகை தரவிருக்கிறார்.

இந்த அற்புதமான மகா யாகத்தில் கலந்து கொள்ள வருமாறு சித்தர்கள் குரல் அமைப்பின் ஸ்தாபகர் சிவசங்கர் ஜீ அழைப்பு விடுக்கிறார்.

இது தொடர்பில் அவர் கூறுகையில்,

சித்தர்களுக்கே உரித்தானது ஒரு நாள் சித்தர் பௌர்ணமி என்ற சித்ரா பௌர்ணமி நாள். அன்றைய தினம் எல்லா சித்தர்களும் வருடத்தில் ஒரு தடவை இந்த பூமிக்கு வரும் நாள்.

இவ்வருடம் அது எதிர்வரும் 12 ஆம் திகதி திங்கட்கிழமை சித்ரா பௌர்ணமியன்று வருகிறது.

அன்று இரவில் இலங்கையில் சித்தர்கள் வாழும் வேலோடும் மலையில் பதினெண் சித்தர்கள் சன்னிதியில் அபூர்வ காய கல்ப மூலிகைகளை கொண்டு ஒரு மாபெரும் சர்வ வல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வி நடைபெறவுள்ளது.

இந்தியாவில் இருந்து ஒரு மாபெரும் குபேரயோகி, குபேர குருஜி, அவரது குழுவினருடன் வருகை தரவுள் ளார்.

அத்துடன் எல்லோருக்கும் அதி சூட்சமமான தன யோக ஆகர்சண குபேர சங்கல்பத்தை செய்து சக்தி வாய்த்த குபேர தீக்ஷையும்கூடி தருகிறார்.

இந்த அற்புதமான சித்ரா பௌர்ணமி சிறப்பு வழிபாடுக்கு எல்லோரையும் அழைக்கிறோம். – என்றார்.





# ஊராட்சி முற்றக் கலந்துரையாடல்

(த.சுபேசன்)

கிறிசலிஸ் நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஊராட்சி முற்ற கலந்துரையாடல்களின் மாகாண மட்ட கலந்துரையாடல் கைதடியில் அமைந்துள்ள பிரதம செயலாளர் செயலகத்தில் நடைபெற்றது.

வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் இளங்கோவன் தலைமையில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் வடக்கு மாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன், கிறிசலிஸ் நிறுவன திட்ட மற்றும் பிராந்திய முகாமையாளர் ம.பிரபாகரன், திணைக்கள தலைவர்கள், குடிசார் அமைப்புக்களின் சம்மேளன பிரதிநிதிகள், சமூகத் தலைவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

இணைய வழியில் வடக்கு மாகாணத்தை சேர்ந்த அரச அதிபர்கள், மேலதிக அரச அதிபர்கள் ஆகியோரும் பங்கெடுத்திருந்தனர்.

கலந்துரையாடலில் மாவட்ட மட்ட ஊராட்சி முற்ற கலந்துரையாடல்களில் தீர்க்கப்படாத வைத்தியத்துறை சார்ந்த பிரச்சினைகள், கல்வித்துறை சார்ந்த பிரச்சினைகள் மற்றும் பால்நிலை வன்முறை சார்ந்த பிரச்சினைகள் தொடர்பாக ஆராயப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.




# ஆஸி. நாடாளுமன்றில் ஈழத்தமிழ் பெண்...!

## மீண்டும் பிரதமராக அல்பானீஸ் !

● ஐங்கரன் விக்கினேஸ்வரா.

உலகளாவிய ரீதியில் டொனால்ட் டிரம்ப் அரசின் வர்த்தக வரிச் சுமைகளால் பாதிப்புக்குள்ளான நாடுகளில் தற்போது தேர்தல்கள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன. குறிப்பாக கனடாவில் நடந்த தேர்தல் முடிவுகள் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்பின் அடாவடித்தனத்துக்கு எதிரான பலத்த அடியாக கணிப்பிடப்படுகிறது.

அவுஸ்திரேலியாவில் மே 3 ஆம் திகதி நடந்த பொதுத் தேர்தலில் பிரதமர் அந்தோணி அல்பானீஸ் பாரிய வெற்றி பெற்றுள்ளார்.

இந்த இரு நாட்டு தேர்தல்களில் ஆளும் கட்சிகளுக் கான ஆதரவே அதிகரித்து வந்துள்ளது. நடந்து முடிந்த கனடா, ஆஸ்திரேலிய தேர்தல்கள் டிரம்ப் அரசின் வரிச்சுமை காரணமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளின் எதிர்ப்புக் குரலாகவே கருத இடமுண்டு.

அதற்கேற்ப தேர்தல் முடிவுகள் வெளியான பிறகு, பெரும்பான்மை அரசைத் தக்கவைத்துக் கொள்வதில் அந்தோணி அல்பானீஸ் தலைமையில் இரண்டாவது முறையாக அரசை அமைக்கவுள்ளது.

இரண்டாவது தவணையில் ஆளும் கட்சி அதிக ஆசனங்களுடன் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவது வெகு அரிது. எனினும் கனடாவைப் போல, தற்போது ஆஸ்திரேலிய ஆளும் கட்சி பிரதமர் இதை சாத்தி யமாக்கியிருக்கிறார்.

### அந்தோணி அல்பானீஸ் ஆட்சி

சில மாதங்களுக்கு முன்பு நடந்த கருத்துக் கணிப்பு களில் முன்னணியில் இருந்த எதிர்க்கட்சி கூட்டணி, பொருளாதாரக் கொள்கைக் குழப்பம், அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் டிரம்புடனான ஒப்பீடுகள் மற்றும் முன்மொழியப்பட்ட பிதிய அணு உலைகள் உருவாக்கம், மருத்துவக் காப்பீட்டை நீக்கும் திட்டம் ஆகியவற்றுக்கு மத்தியில் ஆதரவில் பாரிய சரிவை சந்தித்தது.

தற்போது 62 வயதான அந்தோணி அல்பானீஸ், டிரம்பின் வரிவிதிப்புப் போரால் உலகளாவிய கொந்தளிப்பான காலகட்டத்தில் ஆஸ்திரேலியாவை வழிநடத்த ஒரு நிலையான தலைவராக தன்னை நிலைநிறுத்திக் கொண்டுள்ளார்.




தேர்தல் முடிவின் பின்னர் வாக்கு எண்ணிக்கை தொடர்ந்த போது, தொழில்கட்சி மேம்பட்ட பெரும் பான்மையைப் பெற்றது. 2004 இல் ஜோன் ஹோவர்டுக்குப் (John Howard) பிறகு இரண்டாவது முறையாக வெற்றி பெற்ற முதல் பிரதமராக அந்தோணி அல்பானீஸ் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

ஆஸ்திரேலிய மக்கள் மதிப்புகள், நியாயம், விருப்பம் மற்றும் அனைவருக்கும் வாய்ப்புக்காக வாக்களித் துள்ளனர் என்று அல்பானீஸ் சிட்னியின் உள்மேற்கில் உள்ள கேன்டர்பரி – ஹர்ல்ஸ்டோன் பார்க் ஆர்.எஸ். எல். கிளப்பில் ஆரவாரமான தேர்தல் வெற்றி ஆதரவாளர்கள் கூட்டத்தில் கூறினார்.

ஆஸ்திரேலியர்கள் தங்கள் சொந்த வழியில் உலக ளாவிய சவால்களை எதிர்கொள்ளத் தேர்ந்தெ டுத்துள்ளனர். எதிர்காலதுக்காக நீட்டை கட்டியெழுப்பும்

தொடர்ச்சி▼

# ஆஸி. நாடாளுமன்றில் ஈழத்தமிழ் பெண்...!

**தொடர்ச்சி▲**

போது ஒருவருக்கொருவர் கவனித்துக் கொள்கிறார்கள் என்றும் தெரிவித்தார்.

இறுதியான முடிவுகளின் நிலவரப்படி, 88 இடங்களில் தொழிற்கட்சி வெற்றி பெற்று ஒரு தெளிவான பெரும்பான்மை அரசை உருவாக்கியுள்ளது. எதிர்கட்சி கூட்டணி 37 இடங்களைக் கைப்பற்றியுள்ளது. கடந்த தேர்தலை விட 18 இடங்களின் மிகப்பெரிய சரிவை சந்தித்துள்ளது.

**ஈழத் தமிழ் பெண் வெற்றி**

இந்த நாடாளுமன்றத் தேர்தலில் அஷ்வினி எனும் தமிழ் பெண் பெருவெற்றி பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. அஷ்வினி அம்பிகைபாகர் (யுளா யுஅடிைாயனிபயச), ஈழத்தில் புகழ் பெற்ற, குழந்தைக் கவிஞர் அம்பி அம்பிகைபாகரின் பேத்தி ஆவார். சிட்னியில் உள்ள பார்ட்டன் (Barton) தொகுதியில் தொழில்கட்சி சார்பில் போட்டியிட்டு வென்றுள்ளார்.

அத்துடன் 66 சதவீதத்துக்கு மேல் வாக்குகள் பெற்று வெற்றியீட்டி ஆஸ்திரேலிய நாடாளுமன்றம் செல்கிறார். வெற்றியீட்டியிருக்கும் தமிழ்ப் பெண்ணான அஷ்வினி அம்பிகைபாகர் உலகத் தமிழருக்குப் பெருமை சேர்ப்பவராக அமைகிறார். 2022 இல் கோர்ஜெஸ் றிவர் கவுன்சிலராகத் தெரிவாகியிருந்த அவர் ஒரு சட்ட நிபுணராகவும் பயிற்றப்பட்டவர்.

கடந்த நாடாளுமன்றில் ஆட்சியில் இருக்கும் தொழில்கட்சி தேர்தலுக்கு முன் 77 ஆசனங்களும் , எதிர்க்கட்சி 53 ஆசனங்களையும் கொண்டிருந்தது. ஆனால் தற்போதய தேர்தலில் எதிர்க்கட்சி பாரிய பின்னடைவை சந்தித்துள்ளது. குடிவரவுக் கொள்கையில் மாற்றம், அகதிகள் விரோத நடவடிக்கையே எதிர்கட்சியின் தோல்விக்கு முக்கிய காரணம் என்றும் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

**எதிர்க்கட்சி தலைவர் படுதோல்வி**

நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் தனது தொகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன் படு தோல்வி அடைந்துள்ளார். 2001 ஆம் ஆண்டு முதல் டிக்சன் தொகுதியை (Dickson) தக்க வைத்துவந்த பீட்டர் டட்டன், இம்முறை அத்தொகுதியில் மண் கவ்வியுள்ளார். அத்துடன் லிபரல் கூட்டணிக்கு ஏற்பட்ட பின்னடைவுக்கு தான் பொறுப்பேற்பதாகவும் பீட்டர் டட்டன் குறிப்பிட்டுள்ளார்.

எதிர்கட்சியான லிபரல் கட்சியின் (Liberal Party) தலைவர் பீட்டர் டட்டனின் சில திட்டங்கள், அமெரிக்க அதிபர் டிரம்ப் நிர்வாகத்தில் இடம்பெற்றிருக்கும் எலான் மாஸ்க்கின் அரசாங்க திறன் துறையின் செயல்பாடுகளோடு ஒத்துப் போவது போன்று இருப்பதாக மக்களிடையே எதிர்ப்பு கிளம்பியது. இதனால் இந்தத் தேர்தலில் அவருக்கான ஆதரவு குறைந்தது என்றும் கூறப்படுகிறது.

அத்துடன் பீட்டர் டட்டன் அமெரிக்க டிறம்பின் கொள்கைகளைப் பிரதிபலித்ததோடு தீவிர வலதுசாரிக் கொள்கைகளை முன்வைத்து டிறம்பின் வடிவில் பிரசாரம் செய்துவந்தார். இதனால் அவர் “DOGE-y Dutton” என ஊடகங்களில் நையாண்டி செய்யப்பட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

முக்கியமாக அரசு ஊழியர்கள் முழு நேர வேலைக்கு அலுவலகத்துக்குத் திரும்ப வேண்டும். பொதுத்துறை ஊழியர்கள் 10 ஆயிரம் பேர் வேலையிழக்கும் திட்டம் ஆகியவை கடும் விமர்சனங்களுக்கு உள்ளாக்கப்



பட்டதால், அதனை டட்டன் கைவிடும் நிலைக்குத் தள்ளப்பட்டார்.

இந்தத் தேர்தலில் எதிர்க்கட்சியும் கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டாலும் இறுதிக்கட்ட பிரச்சாரத்தில் பெரும் போட்டி நிலவியது.

ஆஸ்திரேலிய வரலாற்றில் இதுவரை எந்தவொரு எதிர்க்கட்சித் தலைவரும் தாம் போட்டியிட்ட தேர்தலில் தோல்வியே அடைந்ததில்லை என்பது குறிப்பிடத்தக்கது. ஆனால் இப்போது அந்த வரலாறு மக்களின் தீர்ப்பால் மாற்றப்பட்டிருக்கிறது.

எதிர்க்கட்சித் தலைவர் பீட்டர் டட்டன், இந்தத் தேர்தலில் தோல்வியை ஒப்புக்கொண்டிருப்பதுடன், தாம் போட்டியிட்ட டிக்சனில் ஆளுங்கட்சி வேட்பாளர் அலி பிரான்சிடம் படு தோல்வி அடைந்துள்ளார். தேர்தல் தோல்விக்கு தாமே முழு பொறுப்பேற்றுக் கொள்வதாகவும் அவர் தெரிவித்திருக்கிறார். இந்த தோல்வியானது நாம் யார் என்பதை தீர்மானித்து விடாது என்று தனது கட்சிக்காரர்களுக்கு ஊக்கமளிக்கும் விதமாக அவர் பேசியுள்ளார்.


தொழிலாளர் கட்சிக்கு இதுவொரு வரலாற்று வெற்றி, இதனை நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்றும் அவர் மனதாரப் பாரட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.


**மீண்டும் லேபர் அரசு**

கடந்த ஜனவரியில் டட்டனின் லிபரல் கட்சி கூட்டணி ஆறு வீதம் முன்னிலையில் இருந்தது. தற்போது ஏப்ரல் மாத தொடக்கத்தில் பிரதமரின் ஆளும் கட்சி ஒன்பது வீதம் அதிகரித்துக் கருத்துக் கணிப்பில் முன்னிலை பெற்று தற்போது இரண்டாவது முறையாக ஆட்சியைக் கைப்பற்றியுள்ளது.

கடந்த 2022ஆம் ஆண்டு மே மாதம் ஆஸ்திரேலியப் பிரதமராகப் பதவியேற்றுக் கொண்ட அல்பனீஸ் மீண்டும் பிரதமராகத் தொடர்ந்து அரசை வழிநடத்தவுள்ளார். இந்த வெற்றியின் மூலம், ஆஸ்திரேலியாவில் கடந்த இருபது ஆண்டுகளில், தொடர்ச்சியாக அடுத்தடுத்த தேர்தல்களில் வெற்றி பெற்று இரண்டாவது முறையாக ஒருவர் மீண்டும் பிரதமர் பதவிக்கு தேர்ந்தெடுக்கப் பட்டுள்ளார்.

இது ஆஸ்திரேலிய வரலாற்றில் மிகப்பெரிய சாதனையாகவே பார்க்கப்படுகிறது. ஆயினும் வாழ்க்கைச் செலவு அழுத்தங்கள், அதிக பணவீக்கம் மற்றும் அதிக வட்டி விகிதங்கள் மற்றும் வீட்டுவசதி மற்றும் வாடகை போன்ற காரணங்களில் மக்கள் விரக்தியடைந்துள்ள சூழலில் இந்த தேர்தல் வெற்றி மூலம் ஆளுங்கட்சி பல சவால்களை எதிர்கொள்ள வுள்ளது.






# வானம் சிவக்கப் பாடிய கவிஞன் புதுவை இரத்தினதுரை நினைவலைகள்...!

ஈழத்திலும் எம்மவர் புலம்பெயர்ந்த நாடுகளிலும் நன்கு அறியப்பட்ட கவிஞர் புதுவை இரத்தின துரை.

இவர் எழுதிய எழுச்சிப் பாடல்கள் உலகெங்கும் எம்மவர் பலரது வீடுகளிலும் விரும்பிக் கேட்கப்பட்டன.

அன்று எழுபதுகளில் இவர் எழுதிய புரட்சிகரக் கவிதைகள் பேராசிரியர் கைலாசபதி முதல் மூத்த எழுத் தாளர்கள் செ.கணேசலிங்கன், கே. டானியல், சில்லையூர் செல்வராசன், டொமினிக் ஜீவா உட்படப் பலரையும் கவர்ந்தது.

அவரது சிறிய தந்தையார் கந்தசாமி இலங்கையில் சிறந்த சிற்பாசாரியார். அவரது வீடும் சிற்பாலயமும் திருநெல்வேலி காளி கோவில் முன்பாக இருந்தன. சிற்பாசாரியார் கந்தசாமி அன்று மொஸ்கோ சார்புக் கம்யூனிஸ்ட் கட்சி ஆதரவாளர். சிறிய தந்தையாரின் சிற்பாலயத்தில் இரத்தினதுரையும் சேர்ந்து பணியாற்றி வந்தார். நாட்டில் பல கோவில்களுக்கான சித்திரத் தேர்களைச் செய்யும் வேலைகளை அவர்கள் மேற் கொண்டார்கள்.

இரத்தினதுரை புத்தூர் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். வரதலிங்கம் – பாக்கியம் தம்பதிகளின் மகனாக 1948 ஆம் ஆண்டு மார்கழி மாதம் பிறந்தவர்.

1972 ஆம் ஆண்டு முதல் சில வருடங்கள் யான் அவருடன் நெருங்கிப் பழகியுள்ளேன். கே. டானியலின் தொழிலகத்தில்தான் முதன்முதலில் சந்தித்துக்கொண் டோம். அன்றுதொட்டு நெருங்கிய தோழர்களானோம்.

1973 – 1974 காலப் பகுதியில் சில மாதங்கள் இரத்தினதுரை எனது ஊரான புங்குடுதீவில் தங்கியி ருந்தார். புங்குடுதீவு கிழக்குக் கலட்டிப் பிள்ளையார் கோவில் தேர் வேலையில் அவர் ஈடுபட்டிருந்தார். அந்த நாள்களில் பத்திரிகை – வானொலிச் செய்தியாளரான யான், கொழும்புப் பத்திரிகைகளுக்கான செய்திகளை அனுப்பப் புங்குடுதீவுத் தபால் நிலையத்தில் காத்திருந்து, பிற்பகல் 4 மணிக்குப் புங்குடுதீவு இறுப்பிட்டித் துறை முகத்திலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிவரும் 'மெயில் பஸ்"ஸில் உள்ள தபால் பெட்டியில் செய்தித் தபால்களைச் சேர்த்துவிட்டு, இரத்தினதுரை வேலைசெய்யும் கோவி லடிக்குச் சைக்கிளில் செல்வதுண்டு.

மாலை 5 மணிக்குப்பின் அவர் வேலை முடித்துக் குளித்துவிட்டு வந்தவுடன் என்னுடன் அழைத்துச் செல்வேன். எனது அக்கா வீடு எனது பொறுப்பில் இருந்தது. (அக்கா அவ்வேளை மட்டக்களப்பில் கமத் தொழில் திணைக்களப் பெரும்பாக உத்தியோகத்தராகப் பணிபுரிந்தார்.) அந்த வீட்டில் இரத்தினதுரை மற்றும் எனது ஓரிரு நண்பர்களுடனும் தங்கியிருந்து உல்லாசமாக இலக்கிய விடயங்களைப் பேசுவோம். கவிதை பாடுவோம். மகிழ்ச்சியாகப் பொழுது கழியும். அந்த நாள்கள் மிக இனிமையானவை.

1974 ஆம் ஆண்டு காலப்பகுதியில் பல்வேறு இலக் கிய நிகழ்ச்சிகளில் நாம் கலந்துகொண்டோம். நெல்லியடியில் 'அம்பலத்தாடிகள்' நடத்திய சித்திரை விழாவில் சில்லையூர் செல்வராசன் தலைமையில் கவியரங்கில் பங்குபற்றினோம். இவ்விழாவில் பேராசி ரியர் க. கைலாசபதி, பேராசிரியர் அ. சண்முகதாஸ் ஆகியோரின் சிறப்புரைகளுடன் 'கந்தன் கருணை' நாடகமும் அரங்கேறியமை குறிப்பிடத்தக்கது.

ஈழத்திலுள்ள ஐந்து இலக்கிய அமைப்புகள் ஒன்றிணைந்து திருமலையில் 1974 இல் நடத்திய புரட்சிகரக் கலைஞர் எழுத்தாளர் மாநாட்டின் அமைப் பாளர்களில் ஒருவராக இரத்தினதுரை, தோழர் நல்லை அமிழ்தனுடன் சேர்ந்து பணியாற்றினார்.

இந்த மாநாட்டில் கே. டானியல், சில்லையூர் செல்வ ராசன், செ. கணேசலிங்கன், என். கே. ரகுநாதன் ஆகியோருட்படப் பலர் கலந்துகொண்டு சிறப்பித்தனர். நானும் கலந்துகொண்டேன். புங்குடுதீவில் யான் நடத்திய இலக்கிய நிகழ்வுகளிலும் அவர் எம்முடன் கவியரங்குகளில் கலந்துகொண்டார்.

இந்த நிகழ்வுகளில் கே. டானியல், நாவேந்தன், புலவர் ஈழத்துச் சிவானந்தன் ஆகியோர் கலந்துகொண்டு

தொடர்ச்சி▼



# வானம் சிவக்கப் பாடிய கவிஞன் புதுவை இரத்தினதுரை நினைவலைகள்...!

தொடர்ச்சி▲

சிறப்புரையாற்றியுள்ளனர்.

இருபாலையில் நடைபெற்ற பாரதி விழாவில் கவிஞர் முருகையன் தலைமையில் இடம்பெற்ற கவியரங்கிலும் நாம் கலந்துகொண்டோம். அரியாலையில் நடைபெற்ற ஓர் விழாவிலும் நாம் கலந்து கொண்டது ஞாபகம்.

ஏழாலையில், மூத்த சகோதரர் நாவேந்தன் இலக்கியப் பணியின் வெள்ளி விழா வட மாநிலக் கல்வி அதிபதி தி. மாணிக்கவாசகர் தலைமையில் நடைபெற்றது. இவ்விழாவில் கே. டானியலுடன் இரத்தினதுரையும் பங்குபற்றிச் சிறப்பித்தார்.

யாழ். பல்தொழில் நுட்ப நிறுவனத்தில் (தொழில் நுட்பக் கல்லூரி) நடைபெற்ற லோகேந்திரலிங்கத்தின் (கனடா உதயன் பத்திரிகை ஆசிரியர்) 'போலிகள்' புதுக்கவிதை நூல் வெளியீட்டு விழாக் கவியரங்கிலும் நாம் கலந்துகொண்டோம். இந்நிகழ்வில் சிறு சலசலப்பு ஏற்பட்டபோது இரத்தினதுரை உணர்ச்சி வசப்பட்டு எழுந்து சொன்ன வரிகள்......

"சந்தியில் இறங்கிவிட்டால்
சாரத்தை இழுத்துக் கட்டிவிட்டால்
நாங்களும் சண்டியர் தாம்
தம்பிகள் இருங்கடா..."

– என்று சில வரிகள் சொன்னது ஞாபகம்.

திருமலையில் இடம்பெற்ற பாரதி விழாவிலும் நாம் சில்லையூர் தலைமையில் கவியரங்கில் பங்குபற்றியமை ஞாபகம். அன்று சமூக விழிப்புணர்வும், எழுச்சியும் கொண்ட கவிதைகளை அவர் எழுதினார். கவிதைக்குரிய ஓசை நயத்தையும் அவர் கவனத்திலெடுத்துள்ளார்.

அவரது முதல் கவிதைத் தொகுப்பு "வானம் சிவக்கிறது" 1970 ஆம் ஆண்டு 'கம்யூனிஸ்ட்' கார்த்திகேசன் மதிப்புரையுடனும் கவிஞர் முருகையனின் முன்னுரையுடனும் வெளியானது.

அன்று தோழர் நா. சண்முகதாசன் தலைமையிலான சீனச்சார்புக் கட்சியென அழைக்கப்பட்ட கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவாளராக அவர் செயற்பட்டார்.

'அ தொடங்கியுள்ள அரிவரிகள் சிற்சிலரால்
சீனாவின் தாசனெனச் சீல் குத்தப்பட்டவன் நான்..."

– என அவர் எழுதியதுண்டு.

சீனப் பெருந்தலைவர் மாஓவின் வழி நிற்பவன் என அவர் கவிதைகளில் குறிப்பிட்டுள்ளார்.

"சீனாவைப் பாடுவதால்..
சீனாவைப் பாடுவதால்
செங்கொடியைப் பாடுவதால்
ஏனோ சில "கவிஞர்"
எம்மீது துள்ளுகிறார்
எங்கள் கவிதைகட்கு
இருக்கின்ற "மவுசு" சில
வெம்பற் கவிஞருக்கு
வேதனையைக் கொடுக்கிறதாம்....."

– எனவும் எழுதியுள்ளார்.

எழுபதுகளில் 'குமரன்" சஞ்சிகையில் வரதபாக்கியான் என்ற புனைபெயரில் அவர் எழுதிய கவிதைகள் அதிகம்.

"ஆண்டவரே ஆண்டாண்டு அலுத்தவரின் பரம்பரைகள்
மீண்டாண்டு ஆண்டு முடிவென்ன கண்டுவிட்டோம்
இரண்டு பெருங்குடும்பம் இலங்கையதை ஆண்டாண்டு
உருண்டு புரண்டெழுந்தும் உழைப்பவர்கள் கண்டதென்ன..?
மாவில்லை சீனி இல்லை மருந்துக்குக்கூட இங்கு
ஆ ஒரு உள்ளிப்பூடு அரைத்திடக் கிடைப்பதில்லை
அரிசியுமில்லை போட ஆடைகள் இல்லை வாய்க்கு
உருசியாய்த் தின்னயேதும் உள்ளதா ஒன்றுமில்லை...

--------- ----- --------

பிண்ணாக்கிற் பிட்டவித்து புற்றுளிரில் கறிசமைத்து
அண்ணாக்கில் ஒட்டுவதை ஆகாரம் என்றெமது
பச்சைக் குழந்தைகளின் பால்வயிற்றை
நிரப்புகின்றோம்
நச்சுப் பொருள்தவிர நாறலையும் தின்னுகின்றோம்

------ ---- ------

தொங்குமணி மாடங்கள் சோலைநிழற் பூமரங்கள்
அங்கம் மினுக்கியுமை அழகுசெய்யும் சாதனங்கள்
தங்கம் வைரநகை சயனிக்கும் இரும்பறைகள்
கங்குல் பகலாக்கிக் கண்சிமிட்டும் மின்விளக்கு
உங்கள் பெருங்கார்கள் உலாவிவரும் நீண்டதெரு
எல்லாம் படைத்துமக்கு எழில்வாழ்வு தந்தவர்கள்
கல்லாய் வெறும்வயிறாய் கண்துயிலல் நீதியெனில்
பொல்லா அந்நீதியினைப் போட்டெரிக்க
நாமெழுவோம்..!"

தொடர்ச்சி▼

# வானம் சிவக்கப் பாடிய கவிஞன் புதுவை இரத்தினதுரை நினைவலைகள்...!

**தொடர்ச்சி▲**

அவரின் இக்கவிதையை அரங்கில் கேட்டவுடன் எனக்குப் பாடமாகிவிட்டது. இதனைப் பல மேடைகளில் யான் குறிப்பிட்டுப் பேசியமை அவருக்கு மகிழ்ச்சியைக் கொடுத்ததுண்டு.

"ஒரு தோழனின் காதல் கடிதம்" என்ற அவரது கவிதை விமர்சனத்துக்கு ஆளாகியதுமுண்டு. அக்க விதையில் காதல் ரசம் சொட்ட கருத்துச் சொல்லியிருப்பார்.

"நள்ளிரவில் வந்து நாய்க்குப் பயந்தொதுங்கி
மெல்ல மூலையிலே சந்தித்துன் புறமுதுகு
ஊசி கழற்றுவதற்கோ உண்மையிலே நேரமில்லை
ஏனென்றால் நானோரியக்கத்தில் நாடிநரம்பாகிப்
போனேன்.."

– என்றவாறு தொடரும் அவர் கவிதை.

காதல் மணம் புரிந்து, அவரது முதல் மகள் மாலிகா பிறந்து 31 ஆம் நாளன்று, குழந்தையைத் தொட்டிலிலிடும் நிகழ்வுக்கு வீட்டிற்கு வருமாறு "'போஸ்கார்ட்"டில் கவிதை மூலம் தோழர்கள் எமக்கு அழைப்பிதழ் அனுப்பியிருந்தார்.

"பெற்றதாய் எதிராய் வந்து
புரட்சியின் போது ஏதும்
குற்றங்கள் செய்தா லெங்கள்
குண்டுகள் அவளின் நெஞ்சைப்
புற்றுகள் ஆக்கும் ஆமாம்
புரட்சியின் போது நாங்கள்
சுற்றமும் துணையும் பாரோம்..."

எனத் தொடரும் அவரது அதிதீவிரக் கவிதையும் விமர்சனத்திற்குள்ளாகியது.

1977 இல் நாட்டில் ஏற்பட்ட பேரினவாத நடவடிக்கை யின்போது சிலாபம் முனீஸ்வரன் கோவில் தேர் எரிக்கப்பட்டமை அவரின் மனதில் ஆற்றொணாச் சீற்றத்தை ஏற்படுத்தியதாம். அத்தேர் செய்யும் பணியில் அவர் பங்குபற்றியிருந்தார். அந்தச் சீற்றத்தால் சிங்கள மக்களையே சபித்துக் கவிதை எழுதியமையும் விமர் சனத்திற்குள்ளாகியது.

அவரது அரசியல் பார்வையிலும் மாற்றம் ஏற்பட்டது. கம்யூனிஸ்ட் கட்சித் தோழர்களைச் சந்திப்பதைக் குறைத்துக்கொண்டார். டானியலைச் சந்திப்பதையும் தவிர்த்துக்கொண்டார். சிங்கப்பூர் சென்று சில காலம் பணிபுரிந்தார். நாடு திரும்பியபோது என்னைச் சந்தித்துப் பல்வேறு அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டார். பேராசிரியர் கைலாசபதியின்மீது மிகுந்த அபிமானம் அவருக்கிருந்தது. சிங்கப்பூரில் பணிபுரிந்தபோதும் கைலாசபதியுடன் கடிதத் தொடர்பிலிருந்ததாகச் சொன்னார். கைலாசபதி இறந்தபோது மிகுந்த கவலை யடைந்தார். அவ்வேளை இரு அஞ்சலிக் கவிதைகளை அவர் எழுதியுள்ளார்.

மூத்த எழுத்தாளர் செ. கணேசலிங்கன் வெளியிட்ட 'குமரன்' சஞ்சிகையில் 'ஆய்வறிவின் தலைமகனை அஞ்சலிப்போம்' என்ற அவரது அஞ்சலிக் கவிதை வெளியாகியது.

"சிம்மாசனம் காலி.. சிற்றரசர் எவருமில்லை
சும்மா அதைவந்து தொடும் தகுதிகூட இல்லை
சிலகாலமல்ல.. சிலவேளை நூற்றாண்டு
பலகாலம் கைலாசபதியின் இடம் வெளியாய்
இருக்கும், அதைநிரப்ப எவருமில்லை எவருமில்லை
தொம்சன் முதல் எங்கள் துரையப்பாபிள்ளைவரை
அருணகிரி தொடக்கம் அல்தூசர் வரையாவும்
ஆய்ந்தறிந்து ஆழும் அளவிட்ட மேதையவன்
சாயும்வரை அந்தச் சந்தனக்கை ஓயவில்லை..."

– எனத் தொடரும் அவரது அஞ்சலிக் கவிதை.

டொமினிக் ஜீவாவின் 'மல்லிகையிலும்' "இது வீர வழிபாடல்ல... ஒரு வேதனைப் பாடல்..." என்ற அவரது அஞ்சலிக் கவிதை வெளியாகியது.

டானியல் தமிழகத்தில் 1986 இல் காலமாகியபோது யாழ்ப்பாணத்தில் டானியல் வீட்டுக்குச் சென்று துக்கத் தைப் பகிர்ந்துகொண்டார்.

டானியலுக்கும் அஞ்சலிக் கவிதை ஒன்றை மனமுருகி 'மல்லிகையில்' எழுதியுள்ளார்.

தீவிரத் தமிழ்த் தேசியவாதியாக அவர் மாறியபின் பல பாடல்களை எழுதியும் புகழ்பெற்றார். ஒலி நாடாவில் வெளிவந்த "களத்தில் கேட்கும் கானங்கள்" பாடல்கள் பலராலும் விரும்பிக் கேட்கப்பட்டதுண்டு.

"வானுயர்ந்த காட்டிடையே நானிருந்து பாடுகிறேன்.." போன்ற பல பாடல்கள் பலர் மனதை ஈர்த்ததுண்டு.

நல்லூர் முருகனைக் கண் திறந்து பார்க்கும்படி அவர் எழுதிய பாடல்களும் பலரைக் கவர்ந்தது.

வரதபாக்கியான், மணிமேகலை, வியாசன், மாலிகா போன்ற புனைபெயர்களிலும் அவர் கவிதைளை எழுதியுள்ளார்.

1990 ஆம் ஆண்டு காலப் பகுதியில் சமாதானப் பேச்சு நடைபெற்ற நேரம், திருமலை முற்றவெளியில் தேனிசைச் செல்லப்பாவின் கச்சேரி நடைபெறவிருந்தது. அவ்வேளை யான் அங்கு ஆளணிப் பயிற்சித் திணைக்களத்தில் பதிப்பாசிரியராகக் கடமையாற்றி வந்தேன். செல்லப்பாவின் கச்சேரி நடைபெறுவதற்கான மேடையலங்காரம் நடைபெற்றுக்கொண்டிருந்தது. யான் முற்றவெளிக்கு முன்பாக வீதியோரம் மதிலோடு சைக்கிளை வைத்துவிட்டு, நண்பர் ஒருவருடன் பேசிக்கொண்டிருந்தேன். மாலை 5 மணியிருக்கும். ஒரு பழைய வெள்ளைநிற "லாண்ட் றோவர்" போன்ற ஒரு வாகனம் வந்து என்னருகில் நின்றது. அதில் இரத்தினதுரை இருந்தார். என்னை அதில் ஏறுமாறு கேட்டார். மேடை அலங்காரத்தைக் கவனிக்கப் போவ தாகவும் என்னையும் வருமாறு கூறினார். நான் சைக்கி ளில் வருகிறேன் எனக் கூறினேன்.

சைக்கிளில் சென்று மேடைக்குப் பின்னால் சைக் கிளை வைத்துவிட்டு, முன்னால் மேடையைப் பார்த்துக் கொண்டு நின்ற அவர் அருகில் சென்றேன். சில இளைஞர்கள் மேடையை அலங்கரித்துக்கொண்டி ருந்தார்கள்.

இரத்தினதுரையைப் பார்த்ததும் எனக்கு ஆச்சரிய மாகவிருந்தது. 'இதென்ன கோலமடாப்பா...' என்றேன். கவிஞர் இரத்தினதுரை அவரது இயக்கச் சீருடையில் இருந்தார்.

"இடத்திற்கேற்ற உடைதான்... .. சரி... இன்று இங்க மேடையில பேசுகிறாயா.." எனக் கேட்டார்.

"வேண்டாம்.. நான் அரச வேலையிலிருக்கிறேன்.." என்றேன்.

"நீங்க இன்னும் சரியாச் சிந்திக்கேல்லை.. உங் களைத் திருத்த ஏலாது.." என்றார்.

"சரி.. பிறகு சந்திப்போம்.." எனக்கூறி நான் சென்றுவிட்டேன்.

அதுதான் இரத்தினதுரையுடனான கடைசிச் சந்திப்பாயிருக்குமென நான் நினைக்கவில்லை.

1991 இல் யான் பிரான்ஸ் நாட்டுக்கு வந்துவிட்டேன். 2009 இறுதி யுத்தத்தின்போது அவர் காணாமல் போனார் என்ற செய்தி கவலையளித்தது.

எழுபதுகளில் அவர் எழுதிய புரட்சிகரக் கவிதைகள், நாட்டின் தொழிலாளி வர்க்கத்தின் எழுச்சிக்கும், தீண்டாமைக் கொடுமைகளுக்கெதிரான போராட்டங்களுக் கும் உந்துசக்தியாயிருந்தன என்று கூறலாம்.

ஈழத்து இலக்கிய வரலாற்றில் அவர் நாமம், அவரது புரட்சிகரக் கவிதைகளுக்காக அவசியம் பதியப்பட வேண்டியதே.

# ‘ஒபரேஷன் சிந்தூர்’ எதிரொலியாக இந்திய விமான சேவைகள் பாதிப்பு



‘ஒபரேஷன் சிந்தூர்’ எதிரொலியாக வட இந்தியாவில் விமான சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

காஷ்மீர் பகுதியில் உள்ள 9 இலக்குகளை குறி வைத்து இந்திய இராணுவம் நேற்று நள்ளிரவு தாக்குதல் நடத்தினர். கோட்லி, பஹ்வால்பூர், முஸாஃபர்பாத் பகுதிகளில் தாக்குதல் நடத்தப்பட்டது.

பஹல்காமில் 26 அப்பாவி உயிர்களை பறித்த பயங்கரவாத தாக்குதல்களுக்குப் பதிலடியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் உள்ள பயங்கரவாத இலக்குகளைக் குறிவைத்து தாக்குதல் நடத்தியுள்ளோம் என்றும் பாகிஸ்தான் இராணுவ தளங்களின் மீது இலக்கு வைக்கப்படவில்லை எனவும் மிகவும் கவனத்துடன் தாக்குதல் நடத்தியுள்ளதாகவும் இந்தியா தெரிவித்துள்ளது.

எனினும் இரு குழந்தைகள் உட்பட குறைந்தது ஏழுபேர் இந்தத் தாக்குதலில் கொல்லப்பட்டனர் என பாகிஸ்தான் கூறியுள்ளது.

இதேவேளை, ஜம்மு, ஸ்ரீநகர், லே, ஜோத்பூர், அமிர்தசரஸ், புஜ், ஜாம்நகர், சண்டிகர் மற்றும் ராஜ்கோட் விமான நிலையங்களுக்கு செல்லும் மற்றும் அங்கிருந்து புறப்படும் ‘எயார் இந்தியா’ விமானங்கள் இன்று மதியம் 12 மணி வரை இரத்து செய்யப்படுகின்றன.

அமிர்தர்சஸ் செல்லும் 2 சர்வதேச விமான நிலையங்கள் டில்லிக்கு திருப்பி விடப்பட்டுள்ளன என்று ‘எயார் இந்தியா’ விமான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே போல் ஸ்பைஸ்ஜெட் விமான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், “வட இந்தியாவில் தற்போது நிலவும் சூழல் காரணமாக தர்மசாலா, லே, ஜம்மு, ஸ்ரீநகர் மற்றும் அமிர்தசரஸ் ஆகிய விமான நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

அடுத்த அறிவிப்பு வரும் வரை சம்பந்தப்பட்ட விமான நிலையங்களுக்கு செல்லும், மற்றும் அங்கிருந்து புறப்படும் ‘ஸ்பைஸ்ஜெட்’ விமானங்கள் அனைத்தும் இரத்து செய்யப்படுகின்றன.

பயணிகள் தங்கள் பயணங்களை இதற்கேற்றவாறு திட்டமிட்டுக் கொள்ள அறிவுறுத்தப்படுகிறார்கள்” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் ‘இண்டிகோ’ நிறுவனம் வெளியிட்டுள்ள அறிவிப்பில், இந்தியா - பாகிஸ்தான் இடையிலான பதற்றமான சூழல் காரணமாக ஸ்ரீநகர், ஜம்மு, அமிர்தசரஸ், லே, சண்டிகர், தர்மசாலா, பைகானேர் மற்றும் ஜோத்பூர் ஆகிய விமான நிலையங்களுக்கு செல்லும், மற்றும் அங்கிருந்து புறப்படும் ‘இண்டிகோ’ விமானங்களின் சேவைகள் இன்று இரத்து செய்யப்படுகின்றன” என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை உட்பட இந்தியா முழுவதும் 259 மாவட்டங்களில் போர்க்கால ஒத்திகை

டில்லி, மும்பை, சென்னை, பெங்களூர், கல்பாக்கம் உட்பட இந்தியா முழுவதும் தாக்குதல் அபாயம் உள்ள 259 மாவட்டங்களில் இன்று போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை மேற்கொள்ளப்படுகிறது.

பாகிஸ்தான் மீது இந்தியா போர் தொடுத்தால், பாகிஸ்தானும் பதில் தாக்குதல் நடவடிக்கையில் ஈடுபடும். அப்போது, அதில் இருந்து தப்பித்து பாதுகாத்துக் கொள்வது எப்படி என்று தாக்குதல் அபாயம் உள்ள பகுதிகளில் வசிக்கும் மக்களுக்கு பயிற்சி அளிக்கப்படும். இதுவே போர்க்கால பாதுகாப்பு ஒத்திகை. தாக்குதல் அபாயம் உள்ள டில்லி, மும்பை, சென்னை, கல்பாக்கம், குஜராத்தின் சூரத், மகாராஷ்டிராவின் தாராபூர், உத்தர பிரதேசத்தில் 19 மாவட்டங்கள், ராஜஸ்தான் மற்றும் பஞ்சாப் எல்லை மாவட்டங்கள் உட்பட 259 மாவட்டங் களில் போர்க்கால பாதுகாப்பு ஒத்தி கையை இன்று மேற்கொள்ள மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களின் தலைமை செயலர்களுக்கு மத்திய உள்துறை அமைச் சகம் உத்தரவிட்டுள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளதாவது: - மக்கள் தங்களை தற்காத்துக்கொள்ள தயார் படுத்துவதே இந்த போர்க்கால ஒத்திகையின் நோக்கம். போர்க்கால பாதுகாப்பு ஒத்திகையை கிராம அளவில் மேற்கொள்ள வேண்டும். அணு



மின் நிலையங்கள், இராணுவ மையங்கள், பெட்ரோலிய எண்ணெய் சுத்திகரிப்பு ஆலைகள், நீர்மின் நிலையங்களுடன் கூடிய அணைகள் உள்ள பகுதிகளில் இந்த ஒத்திகை நடைபெற வேண்டும். இந்த ஒத்திகையில் மாவட்ட ஆட்சியர் உள்ளிட்ட அதிகாரிகள், துணை இராணுவப்படையினர், தேசிய பேரிடர் மீட்பு படையினர், பொலிஸார், மக்கள் பாதுகாப்பு வார்டன்கள், தன்னார்வலர்கள், ஊர்க்காவல் படையினர், என்.சி.சி, என்.எஸ்.எஸ், கல்லூரி மற்றும் பாடசாலை மாணவர்கள், அரசு மற்றும் தனியார் நிறுவன ஊழியர்களை பங்கேற்க செய்ய வேண்டும்.

அபாயம் ஏற்பட்டால் சைரன்கள் மூலம் அபாய ஒலி எச்சரிக்கை விடுக்கப்படும். இதை கேட்டதும் மக்கள் உடனடியாக பதுங்கு குழிகள் அல்லது பாதுகாப்பான இடங்களுக்கு சென்று மறைந்து கொள்ள வேண்டும். இரவு நேரங்களில் வெளிச்சம் இருக்கும் பகுதிகளை குறிவைத்துதான் குண்டு வீசப்படும். அதனால் இரவு நேரத்தில் விளக்குகளை அணைக்க வேண்டும். மீட்பு குழுவினர் தயார் நிலையில் இருப்பதை சரிபார்க்க வேண்டும். தாக்குதல் அபாயம் உள்ள பகுதியில் இருந்து மக்களை மீட்டு பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லும் பயிற்சியில் ஈடுபட வேண்டும். என பேரிடர் மேலாண்மை ஆணையம் தெரிவித்துள்ளது.

# இந்தியாவின் தாக்குதல்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும்

## பாகிஸ்தான் பிரதமர் எச்சரிக்கை





காஷ்மீரில் இந்தியாவின் தாக்குதல்களுக்கு தகுந்த பதிலடி கொடுக்கப்படும் என பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீ்ப் எச்சரித்துள்ளார்.

ஒபரேஷன் சிந்தூர் என்ற பெயரில், காஷ்மீர் பகுதியில் உள்ள 9 இலக்குகளை குறிவைத்து, இந்திய இராணுவம் நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவு தாக்குதல் நடத்தியது.

இந்த ஏவுகணைத் தாக்குதலில் பாகிஸ்தானில் 8 பேர் உயிரிழந்துள்ளனர் என பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தத் தாக்குதலில் 12 பேர் காயமடைந்துள்ளனர் என பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

பாகிஸ்தானின் மூன்று இடங்களில் இந்தியா ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டதாக பாகிஸ்தான் இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்தியாவின் ஜம்மு காஷ்மீரில் மேற்கொண்டிருந்த பயங்கரவாத தாக்குதலில் 26 பேர் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இதனையடுத்து இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் மோதல்கள் ஆரம்பித்தன.

இந்நிலையிலேயே இந்தியா, பாகிஸ்தான் மீது ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளதாக பாகிஸ்தான் தெரிவித்துள்ளது.

மேலும் உரிய நேரத்தில் இந்தியாவுக்கு பதிலடி கொடுப்போம் என பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

இதேவேளை, இந்தியா 'ஒபரேஷன் சிந்தூர்' திட்டத்தின் ஒரு பகுதியாக பாகிஸ்தான் மற்றும் பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு ஜம்மு-காஷ்மீரில் ஒன்பது இடங்களை குறிவைத்ததாக இந்திய ஆயுதப்படைகள் தெரிவித்துள்ளன.

இதனிடையே, தமது இராணுவம் ஐந்து இந்திய விமானங்களை சுட்டு வீழ்த்தியதாகவும், சில இந்திய வீரர்கள் சிறைபிடிக்கப்பட்டனர் எனவும் பாகிஸ்தான் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் தாக்குதல் சம்பவத்தை தொடர்ந்து கருத்து தெரிவித்து பாகிஸ்தான் பிரதமர் ஷாபாஸ் ஷெரீ்ப், "தந்திரமான எதிரி பாகிஸ்தானில் ஐந்து இடங்களில் கோழைத்தனமான தாக்குதல்களை நடத்தியுள்ளது. இந்தியா திணித்த இந்த போர் நடவடிக்கைக்கு பதிலடி கொடுக்க பாகிஸ்தானுக்கு முழு உரிமை உண்டு. அதற்கு தகுந்த பதிலடியும் கொடுக்கப்பட்டு வருகிறது.

ஒட்டுமொத்த நாடும் பாகிஸ்தான் இராணுவத்துக்கு துணை நிற்கிறது. பாகிஸ்தானுக்கும், நம் ராணுவத்துக்கும் எதிரியை எப்படி கையாள்வது என்று தெரியும். எதிரியின் தீய நோக்கங்களை ஒருபோதும் வெற்றி பெற அனுமதிக்க மாட்டோம்." என பிரதமர் கூறியுள்ளார்.





# பாகிஸ்தானின் தாக்குதலில் இந்தியர்கள் மூவர் உயிரிழப்பு

இந்தியாவின் 'ஒபரேஷன் சிந்தூர்' தாக்குதலை தொடர்ந்து, எல்லையில் பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில் இந்திய குடிமக்கள் 3 பேர் பேர் உயிரிழந்தனர். 7 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

பஹல்காம் தாக்குதலுக்கு பதிலடியாக, பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதியில் உள்ள பயங்கரவாத அமைப்புகளின் 9 முகாம்களை குறிவைத்து 'ஒபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் இந்தியா வான்வழி தாக்குதல் நடத்தியது. இதற்கு தக்க பதிலடி கொடுப்போம் என பாகிஸ்தான் தெரிவித்திருந்தது.

இந்நிலையில், இந்தியா - பாகிஸ்தானின் சர்வதேச எல்லைப் பகுதியான எல்லை கட்டுப்பாட்டு கோட்டுக்கு (எல்.ஓ.சி) அருகே பாகிஸ்தான் இராணுவம் நடத்திய தாக்குதலில், இந்தியக் குடிமக்கள் மூன்று பேர் உயிரிழந்தனர். மேலும், 7 பேர் இந்த தாக்குதலில் படுகாயம் அடைந்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது.

பாகிஸ்தான் இராணுவத்தின் இந்த தாக்குதலால் ஜம்மு காஷ்மீரில் உள்ள பூஞ்ச், குப்வாரா மற்றும் பாரா முல்லா மாவட்டங்களில் உள்ள வீடுகள் மற்றும் கடைகள் சேதமடைந்துள்ளன. இந்த தாக்குதலை அடுத்து எல்லை கட்டுப்பாட்டு கோட்டுக்கு அருகே அமைந்துள்ள மாவட்டங்களில் பாடசாலை மற்றும் கல்லூரிகள் செயல்படாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், காஷ்மீர் பல்கலைக்கழகத்தில் புதன்கிழமை நடைபெற இருந்த தேர்வுகளுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளன. பாதுகாப்பு கருதி எல்லையோரத்தில் வசிக்கும் மக்கள் இடம் பெயர்ந்து வருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

கனடா முரசு

செவ்வாய்க்கிழமை 06/05/2025

## கார் விபத்தில் நால்வர் பலி

எட்மண்டன் நகரின் தெற்கில் இடம்பெற்ற பயங்கர கார் விபத்தில் நால்வர் உயிரிழந்துள்ளனர் என பொனோகா பொலிஸார் அறிவித்துள்ளது.

02



# கனடா விற்பனைக்கு அல்ல: பிரதமர் மார்க் கார்னி தெரிவிப்பு

**கனடா விற்பனைக்கு அல்ல பிரதமர் மார்க் கார்னி தெரிவித்துள்ளார்.**

**வெள்ளை மாளிகையில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்புடன் நடைபெற்ற சந்திப்பின் போது அவர் இந்த விடயத்தை தெரிவித்துள்ளார்.**

**வீட்டுமனை வியாபாரத்தில் ஈடுபட்ட அமெரிக்க ஜனாதிபதிக்கு சில இடங்கள் ஒருபோதும் விற்பனைக்கு வராது என்பது தெரிந்திருக்கவேண்டும் என தெரிவித்துள்ளார்.**

**கடந்த சில மாதங்களில் தாம் கனடி**யர்களை சந்தித்ததாகவும், கனடா விற்கபடக் கூடிய நாடல்ல, எதிர்காலத்திலும் அல்ல," எனவும் அவர் தெளிவாக தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவுடன் நாங்கள் முன்னேற்றமடைந்துள்ள ஒத்துழைப்பு தான் மிகப்பெரிய வாய்ப்பு. பாதுகாப்பு தொடர்பாகவும், தமது அரசாங்கம் புதிய முதலீடுகளை மேற்கொள்கிறது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

எங்கள் கூட்டுறவையும் பாதுகாப்பையும் கட்டமைக்க நாங்கள் முழுமையாக செயல்பட தயாராக இருக்கிறோம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

# பிராம்டனில் கப்பம் கோரல் சம்பவம்; விசாரணையில் மூன்று பேர் கைது

கனடாவின் பிராம்டனில் கப்பம் கோரல் குற்றச்சாட்டில் மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர் என பீல் பகுதி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஏப்ரல் 30 ஆம் திகதி, பிராம்ப்டனில் குயின் வீதி மற்றும் கெனடீ சாலை தெற்குப் பகுதியில் உள்ள ஒரு வணிக வளாகத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பின்னர், பொலிஸார் சம்பவ இடத்திற்கு அழைக்கப்பட்டனர்.

சம்பவத்தின் போது அந்த வளாகத்தில் யாரும் இருக்கவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

03





# தேசிய வளர்ச்சித் திட்டங்களுக்கு பிரதமர் ஆதரவளிக்க வேண்டும்

## *ஒன்டாரியோ மாகாண முதல்வர் கோரிக்கை*

ஒன்டாரியோ மாகாணத்திற்கு முக்கியமான வளர்ச்சி திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்கும்படி, மாகாண முதல்வர் டக் ஃபோர்ட், கனடா பிரதமர் மார்க் கார்னிக்கு கடிதம் எழுதியுள்ளார்.

அதில், அதிவேக நெடுஞ்சாலை 401 கீழ் சுரங்கம் அமைக்கும் திட்டம் உள்ளிட்ட பல தேசிய கட்டுமான திட்டங்களுக்கு அவர் ஆதரவு கோரியுள்ளார்.

“2025 மார்ச் 21 அன்று நடைபெற்ற முதலர்கள் கூட்டத்தில், தேசிய கட்டுமானத் திட்டங்களுக்கு சிக்கலான ஒப்புதல் முறைகளை எளிமையாக்க நடவடிக்கை எடுப்பதாக நீங்கள் வாக்குறுதி அளித்தீர்கள்” என ஃபோர்ட் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த கூட்டத்திலேயே, “உங்கள் மாகாணத்தில் முன்னுரிமையுடன் நடைமுறைப்படுத்த வேண்டிய தேசிய வளர்ச்சித் திட்டங்களை சொல்லுங்கள்” என பிரதமர் கேட்டதாக ஃபோர்ட் குறிப்பிட்டார்.

இதனடிப்படையில், ரிங் ஒஃப் ஃபயர் பகுதியில் முக்கிய கனிமங்கள் சுரங்க மற்றும் ஒத்த தொடர்புடைய புனரமைப்பு திட்டங்களை முன்னிலைப்படுத்தவும், சிறிய மற்றும் பெரிய அணுக்கழு மின்னுற்பத்தி உலைகளை கட்டுவதற்கான உதவிகளையும் ஃபோர்ட் கோரியுள்ளார்.

பெரும் விவாதத்தை ஏற்படுத்திய ஹைவே 401 கீழ் வாகனங்கள் மற்றும் போக்குவரத்துக்கான சுரங்க திட்டமும் இதில் அடங்கியுள்ளது.




## கார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விபத்து ஹைவே 2ஏ மற்றும் டவுன்ஷிப் சாலை 434 பகுதியில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகின்றது.

GMC அகாடியா வாகனத்தில் பயணம் செய்த 41 வயதான சாரதி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

மற்றுமொரு வாகனத்தில் பயணித்த 26 வயது ஆணும், 14 வயது சிறுவனும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

அதே வாகனத்தில் இருந்த 14 வயது சிறுமி, விமானம் மூலம் மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டபோதும், பலத்த காயங்களுக்கு பின்னர் உயிரிழந்தார். இந்நால்வரும் மாஸ்க்வாசிஸ் பகுதியைச் சேர்ந்தவர்கள் என உறுதிப்படுத்தியுள்ளது.

GMC அகாடியா வாகனம், மற்ற வாகனங்களை முந்திக் செல்ல முயன்றபோது எதிரே வந்த டிகுவான் வாகனுடன் நேருக்கு நேர் மோதி இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிய வருகிறது.

விபத்து தொடர்பான விசாரணை தொடரும் நிலையில், இது குறித்து மேலும் தகவல்கள் வருமென எதிர்பார்க்கப்படுகிறது.



# கனடா புதிய ஜனநாயகக் கட்சிக்கு இடைக்கால தலைவர் நியமனம்

கனடாவின் புதிய ஜனநாயகக் கட்சியின் (NDP) இடைக்கால தலைவராக பிரிட்டிஷ் கொலம்பியா மாகாண நாடாளுமன்ற உறுப்பினர் டான் டேவிஸ் நியமிக்கப்பட்டுள்ளார்.

கட்சியின் தேசிய பேரவை திங்கள் கிழமையன்று கூடித் தீர்மானம் எடுத்தது.

முன்னாள் தலைவர் ஜக்மீத் சிங், ஏப்ரல் 28 அன்று நடைபெற்ற பொதுத் தேர்தலில் தன் சொந்த தொகுதியான மத்திய பர்னபியில் தோல்வியடைந்ததனை தொடர்ந்து தனது இராஜினாமாவை அறிவித்தார்.

நாடாளுமன்றத்தின் முந்தைய அமர்வில் சுகாதாரத்துறை நிழல் அமைச்சராக இருந்த டான் டேவிஸ், நெடுஞ்சாலைகள் மற்றும் மருந்துப் பாதுகாப்புச் சட்டங்களை முன்னேற்றுவதற்காக லிபரல் அரசுடன் NDP நடத்திய பேச்சுவார்த்தைகளுக்கு வழிகாட்டியாக இருந்தார்.

கட்சி தலைமை தொடர்பான நிலையைப் பற்றி ஆலோசிக்க NDP நாடாளுமன்றக் குழு கடந்த வாரம் இருமுறை சந்தித்தது.

இந்த விவாதங்கள், தேசிய பேரவையின் திங்கள் கிழமை முடிவை உருவாக்க உதவியதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

முந்தைய வாரம் நடைபெற்ற தேர்தலின் பின்னர் NDP நாடாளுமன்றத்தில் வெறும் ஏழு ஆசனங்கள் மட்டுமே பெற்றதால், அதிகாரப்பூர்வ கட்சி அந்தஸ்தை இழந்தது.

புதிய தலைமைத் தேர்தலுக்கான விதிமுறைகள் மற்றும் நேரமென்பவை பின்னர் அறிவிக்கப்படும் என கட்சி அறிவித்துள்ளது.

## பிராம்டனில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆனால், அதனைத் தொடர்ந்து, உரிய நபர் ஒருவருக்கு தெரியாத நபரிடமிருந்து பணம் கோரிய மிரட்டல் செய்திகளும் கிடைக்கத் தொடங்கின.

மே 1 ஆம் திகதி, பல்வேறு விசாரணை அணிகள், கண்காணிப்பு, சமூகவியல் கையாளும் குழு மற்றும் நடவடிக்கைக் குழுவின் ஒத்துழைப்புடன் நடத்தப்பட்ட தீவிர விசாரணையின் பின்னர், பிராம்ப்டனைச் சேர்ந்த மூன்று நபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஹர்பால் சிங் (வயது 34), ரஜ்னூர் சிங் (வயது 20) மற்றும் எக்னூர் சிங் (வயது 22) ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர். இந்த மூவரும் தற்போது காவலில் வைத்து, பிணை விசாரணைக்கு முன்பாக நீதிமன்றத்தில் ஆஜராக்கப்பட உள்ளனர்.